
1

# உழுவார் உலகத்தார்க்கு ஆணி

"போராடும் பாழ்நிலத்தை அந்நாளில்
புதுக்கியவன் யார்? அழகு நகர் உண்டாக்கிச்
சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெல்சேர உழுது உழுது பயன்விளைக்கும்
நிறை உழைப்புத் தோள்கலெல்லாம்
எவரின் தோள்கள்?"

**- பாரதிதாசன்**



மனித வுயிர் காக்க
மண் புழுவாய் உழைக்க
என்ன பாவம் செய்தானோ
ஏரோட்டும் உழவனே.

நிலவுக்கும் ஓய்வுண்டு
நீலவானில் மறைவுண்டு
உழவருக்கு ஏது இங்கே
உள்ளபடி இல்லை இங்கே.

**- கூரம் துரை**

இரு கவிஞர்களின் கவிதை வரிகளில் வெளியாகும் கருத்துகளைக் கலந்துரையாடி, ஒப்பீடு செய்து, குறிப்பு தயாரித்து வாசிக்க.

- பாழ்நிலத்தை விளைநிலமாக்கி நமக்கு உணவினைத் தருபவர் யார்?
- மனித உயிர்காக்க மண்புழுவைப்போல உழைப்பவனைப் பற்றி கூரம் துரை பாடுவதென்ன?
- சமூகத்திற்காகவே உணவை உற்பத்தி செய்யும் உழவனை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டாமா? எவ்வாறு?

# ஏர்முனையில்

வேளாண்மை நம் நாட்டின் மிகப் பழமையான தொழில். மனிதனின் உணவுக்கும், உடைக்கும், உறைவிடத்திற்கும் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் அனைத்தும் வேளாண்மையைச் சார்ந்தவையே.


பண்டைய தமிழிலக்கியங்களில் வேளாண்மை பற்றிய செய்திகள் பல இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, போன்ற இலக்கண இலக்கியங்கள் இதற்குச் சான்றாக மிளிர்கின்றன. உழவுத்தொழிலின் சிறப்பு பற்றியும் உழவனின் பெருமை பற்றியும் இவ்விலக்கியங்களில் மிகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

உழவின் சிறப்பு பற்றி சங்க இலக்கியங்களில் பலவாறு கூறப்பட்டுள்ளன.

"ஈரம்பட்ட செவ்வி பைம்புனத்து
ஓர் ஏர் உழவன் போலப்
பெருவிதுப்பு உற்றன்றால் நோகோ யானே"

**குறுந்தொகை: 131**

ஈரம்பட்ட செவ்வியென்பது 'மழைபெய்யும் பருவம்' என்னும் பொருளைத் தருவதாகும். மழைபெய்யும் காலத்தில் வேலை செய்தார்கள் என்பதால் மானாவாரிப் பயிர் செய்யும் முறையினை மேற்கொண்டிருந்தார்கள் என்பதை அறியலாம்.



ஓர் ஏர் உழவன் என்ற உவமையால் அறியப்படுவன:

- உழவர்களில் சிலர் ஒரே ஓர் ஏரினை வைத்துக் கொண்டு உழுது வந்தார்கள்.
- பருவத்தில் விதைத்துவிட வேண்டுமென்று விரைந்து உழுதனர்.
- ஓர் ஏர் கொண்டு வாழும் அளவிற்கு அவர்களுக்கு நிலமும் இருந்தது.

வள்ளுவப் பெருந்தகையும் உழவுத்தொழிலுக்குச் சிறப்பான இடத்தை அளித்துள்ளார். ‘உழவு’ எனும் அதிகாரத்தில் உழவர் தம் சிறப்பைப் பற்றி அவர் கூறிய விதம், உழவர்கள் மனித குலத்திற்குச் செய்யும் மாபெரும் தொண்டைப் போற்றுவதாய் உள்ளது.

“சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை”

பிறதொழில்களில் சுழன்று திரிந்தாலும் உழவுத்தொழிலின் பின்னால்தான் இவ்வுலகமே நடக்கும். எனவே எத்துன்பம் நேரிடினும் உழவுத்தொழிலையே தலையாகக் கொள்ள வேண்டும் என்கிறார் வள்ளுவர். மேலும்

“உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது

எழுவாரை எல்லாம் பொறுத்து”. என்னும் குறளில்

உழவர்களே உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள் என்று குறிப்பிடுகிறார்.

இந்நிலத்தில் வாழும் அனைவரும் உழவர்களை நம்பியே வாழவேண்டும் என்று கூறுவதினால் உழவர்கள் எத்தகைய போற்றுதலுக்குரியவர்கள் என்பதை நன்கு உணரமுடிகின்றது.

நம் பண்பாட்டின் சின்னமாக விளங்கும் உழவுத்தொழிலின்றி வாழ்ந்தால் நம் குடியும் சுற்றமும் கெடும். சிறந்த வாழ்வு பெற உழவுத்தொழிலை மேற்கொள்ள வேண்டும். இந்நாட்டையாளும் வேந்தனும், உழவர்களைத் தொழுதுசெல்வான். இதனை,

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்”

எனும் குறட்பாவின் வாயிலாக வள்ளுவர் உணர்த்திச் செல்கிறார்.

**சிலப்பதிகாரம்**

முழுமுதற் காப்பியமாம் சிலப்பதிகாரத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் நடந்த வேளாண்மை பற்றியும், அதன் நுட்பங்கள் பற்றியும் விளக்கிச் சென்றுள்ளார் இளங்கோவடிகள். மன்னராட்சியும், மக்கள் பண்பாடும் நிலைக்க வேண்டுமாயின், அந்நாடு வேளாண்மையில் சிறப்புற விளங்க வேண்டும். மன்னனும், மக்களும் உழவர்களை எதிர்நோக்கியே வாழ்கிறார்கள் என்பது இளங்கோவடிகளின் தெளிவான கருத்தாகும். இதனையே,

‘புரப்போர் கொற்றமும் இரப்போர் சுற்றமும்

உழவிடை விளைப்போர்’ என்று குறிப்பிடுகிறார்.

இளங்கோவடிகள், இயற்கை வாழ்த்தைக் கடவுள் வாழ்த்தாகச் சிறப்பித்தமையை, “மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்”என்ற வரிகளிலிருந்து அறியலாம். இதற்கு ‘மழையை வணங்குவோம்’ என்று பொருள் கொள்வதைவிட மழைநீரைச் சேமித்துப் பாதுகாத்து உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்துவோம் என்று பொருள் கொள்வதே சிறந்ததாகத் தோன்றுகிறது.

**ஏர்எழுபது**

கவிச்சக்கரவர்த்தி கம்பரும் உழவுத்தொழிலின் சிறப்புப் பற்றிப் பாடியுள்ளார். எழுபது செய்யுட்களடங்கிய ‘ஏர் எழுபது’ கம்பரால் படைக்கப்பட்ட நூல். அந்நூல் முழுக்க முழுக்கப் பயிர்த்தொழில் பற்றியே கூறுகின்றது.

“தேர்வேந்தர் போர்க்களத்தில் சிலர் வெல்வர், சிலர் தோற்பர்”. ஏர்வேந்தர் போர்க் களத்தில் இரப்பவரும் தோலாரே என்பது ஒரு பாடல். மன்னர் தம் போர்க்களத்தில் வெற்றிதோல்விகள் உண்டு; உழவர் தம் போர்க்களத்தில் தோல்வி என்பதே கிடையாது. ஏனெனில் உழவர்கள் பிறருக்கு வழங்குவதில் என்றுமே தவறியதில்லை. அத்தகு சிறந்த பண்புநலம் பெற்றவர்கள் உழவர்கள் என அவர்கள் பண்பாட்டை விளக்கிச் சமுதாயத்தில் அவர்களின் இடத்தை மதிப்பீடு செய்கின்றார் கம்பர்.

உழவுத் தொழிலில் கருவிகளின் இன்றியமையாமையைப் புலப்படுத்தும் வகையில் கருவிகள் பலவற்றின் ஒவ்வொரு பகுதியையும் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் தம் விளக்கத்தில் கலப்பையும், மேழியும், கொழுவும், நுகமும் இடம்பெறுகின்றன. நுகத்தாணியும், நுகத்தை வைத்து எருதின் கழுத்தில் பூட்டும் பூட்டாங்கயிறும் எருதை அடித்து ஓட்டும் தார்க்குச்சியும், சிறப்பிக்கப்படுகின்றன. கொட்டு (மண்வெட்டி)

எருக்கட்டை, பறம்பு, அரிவாள் முதலிய கருவிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கருவிகள் கொண்டு அக்கால மக்கள் வேளாண்துறையில் பெற்றிருந்த முன்னேற்றத்தை அறியலாம்.

மழை தவறாது பெய்ய வேண்டுமாயின் உழவர்கள் தங்கள் ஒழுக்கமாம் கடமையில் தவறாது நின்று ஏரை நடத்த வேண்டும். பசியை ஒழிக்க அவர்கள் பசுமைப்புரட்சியை மேற்கொள்வாராயின் மொழி வளம்பெறும். முத்தமிழ் தழைத்தோங்கும். நாட்டிற்கு நல்லபல சிறப்புகள் வரும். அறிவாற்றல் பெருகும். கொள்வாரும் கொடுப்பாருமின்றி 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற சமநிலை ஏற்படும்.. உலக அறங்கள் செவ்வனே நடைபெறும்; நாட்டு மக்கள் நலமும் நற்காப்பும் பெறுவர்.

"கார்நடக்கும் படிநடக்கும் காராளர் தம்முடைய

ஏர் நடக்கும் எனில் புகழ்கால் இயலிசை நாடகம் நடக்கும்,

சீர்நடக்கும் திறம் நடக்கும் திருவறத்தின் செயல் நடக்கும்

பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே" என்று உழவராலும், உழவுத்தொழிலாலும் மட்டுமே இவ்வுலகின் அனைத்து நற்செயல்களும் நடக்கும் எனக் கவிதை வடித்துள்ளார், கம்பர்.

### முக்கூடற்பள்ளு

பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய முக்கூடற்பள்ளு சுவைமிகுந்த நாடக நூலாகும். சமுதாயத்தில் உழவர்கள் பெற்ற இடம், அவர்தம் அகவாழ்வு, புறவாழ்வு பயிர்த் தொழிலின் உயர்வு, அத்தொழிலின் நுட்பங்கள் ஆகியன இந்நூலில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கட்டுரையின் வாயிலாக சமூகத்திற்காக உணவை உற்பத்தி செய்பவர்கள் உழவர்கள் என்பதும் வேளாண்மைத் தொழில் ஏனைய தொழில்களினும் சிறப்புடைத்து என்பதும் உழவர்கள் சமூகத்தின் கடமையைச் செய்வதில் ஈடுபட்டுள்ளனர் என்பதால் அவர்களைச் சமூகம் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பதும் தெளிவாகிறதல்லவா?

**– இலக்கியமும் வேளாண்மையும் (தொகுப்பு நூல்)**

# செயல்பாடுகள்

## குறிப்பு எழுதுதல்

'எத்துன்பம் நேரிடினும்உழவுத் தொழிலையே தலையாகக் கொள்ள வேண்டும்' என்று வள்ளுவர் கூறக் காரணம் என்ன? குழுவாகக் கலந்துரையாடிக் கருத்துகளைத் தொகுத்து எழுதுங்கள்.

## வினா நிரல் உருவாக்குதல்

உங்கள் வட்டாரத்தில் அனுபவ முள்ள விவசாயி ஒருவரை நேரில் கண்டு அவருடைய வாழ்க்கை முறை, வேளாண்மைத் தொழிலோடு கொண்டுள்ள அனுபவம், எதிர்கொள்ளும் பிரச்சனைகள் ஆகியவற்றைப் பற்றி நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் ஒன்றைத் தயாரியுங்கள்.

## கருத்தரங்க உரை தயார் செய்தல்

- "உழுவார் உலகத்தார்க்கு ஆணி" - என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடத்த உரை தயார் செய்க.

## சுவரொட்டி, பத்திரிகைச் செய்தி வெளியிடுதல்

- கருத்தரங்க நிகழ்வைக் குறித்த சுவரொட்டி, பத்திரிகைச் செய்தி ஆகியவற்றை உருவாக்குங்கள்.

## படைப்புகளைத் திரட்டுதல், நூலடைவு செய்தல்

- தற்கால இலக்கியங்களில் உழவுத் தொழிலைப் பொருளாகக் கொண்ட கவிதைகள், கதைகள் போன்றவற்றைத் திரட்டுங்கள்.
- உழவுத் தொழிலைப் பொருளாகக் கொண்ட நாவல்களின் பெயர்களைத் திரட்டி நூலடைவு செய்க.

## கவிதை படைத்தல்

உழவனின் சிறப்பு, சமூகத் தொடர்பு, உழவின் மேன்மை போன்ற கருத்துகள் வரும் கவிதையைச் சொந்தமாக எழுதுங்க

# கரிசல் காட்டில்

தெருவில் ஆட்கள் கூட்டமாக நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

“இதென்ன கூட்டம்! ”மாரியம்மா வாசலுக்கு ஓடினாள்.

கூட்டத்தின் நடுவே முத்தையா போய்க் கொண்டிருந்தார்.

“அடடே வந்துட்டாரே!” கண்ணப்பன் வெளியே வந்தான்.

“வாங்க வாங்க என்னய்யா சொகந்தானா?” முத்தையா கண்ணப்பனின் இரு கைகளையும் பற்றிக் கொண்டு நலம் விசாரித்தார். கம்பிளிப் பூச்சிப் போலக் கத்தரிக்கப்பட்ட அவர் மீசையின் கீழே வெள்ளைப் பற்கள் பளிச்சென்று மின்னின.

“நல்ல சொகம். ஒங்கள எதிர்பாத்துக்கிட்டேதான் உக்காந்திருந்தோம்” என்றான் கண்ணப்பன். பேசிப் பேசி அவர்கள் படிப்பகத்துக்கு வந்தார்கள். கண்ணப்பன் ஊர் விவசாயிகளையும் விருந்தினர்களையும் முத்தையாவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

கொண்டப்பன் கண்ணப்பனிடம் எல்லாம் தயாராயிருப்பதாகச் சொன்னான்.

பட்டாளத்துக்காரர் முத்தையாவிடம் ரகசியமாகக் கேட்டார்.

“எதாச்சும் சாப்பிட்டுக்கிட்டு வந்திர்லாமா?”

“எல்லாம் வந்து பாத்துக்கலாம். மொத வேல முடியட்டும்” என்றார் முத்தையா.

களத்துமேட்டில் பள்ளிக்கூடத்தை ஒட்டி விவசாயச் சங்கம் அமைப்பதாக ஏற்பாடு. விவசாயிகள் களத்து மேட்டில் குவிந்தார்கள். கொண்டப்பனும் ராமநாதனும் ஆண்களை மேற்கேயும் பெண்களைக் கிழக்கேயுமாக ஒதுக்கி நிறுத்தினார்கள். ஊர்ப்பெண்கள் பொங்கலுக்கு வாங்கிய துணியையே உடுத்தியிருந்தார்கள். மாரியம்மாள், கொண்டப்பனின் சகோதரிகளான கொண்டம்மாள், வெங்கடம்மா, வேலுச்சாமியின் சகோதரி பாக்கியம் ஆகிய நால்வரும் நடுவில் வந்தார்கள். கொண்டம்மாள் தன் கையிலிருந்த விளக்கை ஒரு சமமான இடத்தில் வைத்து, தன் மடியிலிருந்த பூவை எடுத்து அதற்குச் சூட்டினாள். வெங்கடம்மாளிடமிருந்து எண்ணெய்ப் புட்டியை வாங்கி விளக்கு நிறைய எண்ணெய்விட்டு திரிகளிட்டாள் அவள்.

கொண்டப்பன், மண் குவியலின் மேல் ஏறி நின்று அறிவித்தான்.

“இப்போது நம் விவசாய சங்கத்தின் சார்பாக மூக்காயி அக்கா விளக்கேற்றி வைப்பார்கள்.

மூக்காயி அக்கா வரவில்லை.

“வாம்மா வா.”

“ஏன் கூச்சப்படுத, வந்து கொளுத்தி வையி.”

“அட வாம்மா சும்மா”

பல குரல்கள் அவளை உற்சாக மூட்டின. ஆனாலும் அவள் வரவில்லை. கடைசியில் பொன்னி அவளைத் தள்ளிக் கொண்டு வந்தாள். மாரியம்மாளிடம் தீப்பெட்டியை வாங்கி மூக்காயி விளக்கின் திரிகள் ஐந்தையும் கொழுத்தினாள்.

“இதென்ன? ஒரு புள்ளையாரப் புடிச்சி, அறுகம் புல்லக் குத்தி வைக்கிறதுக்குமா பஞ்சமாப் போச்சி”. கெங்கண்ணன் முணுமுணுத்தான்.

“வேணும்னா நீ தலையில அறுகம் புல்லச் செருகிக்கிட்டு வந்து உக்காரு” என்றான் ராமநாதன்.

கண்ணப்பன் முத்தையாவுக்குச் சொன்னான்.

“இதுதான் வீரையன் சம்சாரம், மூக்காயி”.

“ஓ..... அப்பிடியா, வணக்கம்மா. வீரையனுக்கு நீங்க தொணையா அமஞ்சதில நாங்கல்லாம் ரெம்பப் பெருமைப்படுறோம்மா”.

மூக்காயி பதிலுக்கு வணக்கம் போட்டு விட்டுப் பொன்னியுடன் பெண்கள் பகுதிக்குப் போனாள்.

கொண்டப்பன் அடுத்து அறிவித்தான்.

“நாட்டு வாழ்த்து”

கொண்டம்மாள், வெங்கடம்மா, பாக்கியம், மாரியம்மா நால்வரும் வரிசையாக நின்று கரிசல் கவிஞன் பாரதியின் ‘பாரத சமுதாயம் வாழ்கவே’ என்ற பாடலைப் பாடினார்கள்.

தடித்தடியாக நான்கு பெண்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகளைப் போல வரிசையாக நின்று பாடும் அதிசயத்தைப் பார்த்துச் சிறுவர்களும் சிறுமியர்களும் வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தார்கள். கெங்கண்ணன் கைக்கெட்டிய தலைகளில் எல்லாம் ‘நருக் நருக்கென்று ’குட்டினான்.

கொண்டப்பன் அறிவித்தான்”.

“இப்போது திரு. முத்தையா அவர்களை விவசாயச் சங்கத்துக்கு அடிக்கல் நாட்டுமாறு வேண்டுகிறேன்”.

முத்தையா வேட்டியை மடித்துக் கட்டினார். வேலுச்சாமி அவரிடம் கரண்டியைக் கொடுத்தான். கோவாலு குழைத்து வைத்திருந்த ஒரு சட்டி மண்ணை அவர் அருகில்

கொண்டு வைத்தான். அவர் குழியில் இறங்கி ஒரு கல்லைத் தூக்கி வைத்து சாந்தைப் போட்டார்.

ஆண்கள் கைதட்ட, பெண்கள் குரவையிட்டார்கள்.

கொண்டப்பன் அடுத்த அறிவிப்பைச் சொன்னான்.

“இப்போது நம் போராட்டத்தில் உயிர் இழந்த வீரர்களின் நினைவாக வீரம்மா அக்கா சங்க கட்டிடத்தின் முன் ஒரு கொன்றைக் கன்றை நடுவார்கள்.

இந்த ஏற்பாடு இளைஞர்களாகச் செய்தது, வீரம்மாளுக்கே இது தெரியாது.

“என்னயா இது. ஒரு ஒழுங்கு வேண்டாமா, எதெதுக்கு யார் யாரெங்கிறது இல்லியா?” என்று இரைந்தார் சென்னப்பன். அவருக்கு சிலர் பக்கப்பாட்டு பாடினார்கள்.

கொண்டப்பன் பதில் சொன்னான், இதில் என்னயா ஒழுங்கு கெட்டுப்போச்சி. கம்மா ஒடஞ்ச அன்னிக்கி அவ ஒதவினது மாதிரி இந்த ஊருக்கு எவன்யா ஒதவினான்.

தீப்பிடிச்ச ஊடுகளுக்குள்ளால உயிர மதியாமப் புகுந்து அவ எத்தின பேரக் காப்பாத்தினா?”

யாரும் வாய் திறக்கவில்லை.

ராமநாதன் வீரம்மாவைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தான். கொண்டப்பன் குழியைக் கிளைத்துக் கொடுத்தான். அவள் வேலுச்சாமியிடம் செடியை வாங்கி நட்டு, மண் அணைத்து பக்கத்திலிருந்த குடத்தைக் குழியில் சரித்தாள்.

“இப்போது திரு முத்தையா பேசுவார்கள்”

“உக்காருங்க... உக்காருங்க” சுப்பையாவும் கண்ணப்பனும் விவசாயிகளை ஆங்காங்கே உட்கார வைத்தார்கள்.

“நண்பர்களே....” முத்தையா சிரித்துக் கொண்டே பேச்சைத் தொடங்கினார். அவர் குரல் ‘கணீர்’ என்று ஒலித்தது. அவர் கண்கள் தீச் சுடர்கள் போலப் பிரகாசித்தன. பெண்கள் பக்கமும் ஆண்கள் பக்கமும் திரும்பித் திரும்பி குதிகாலை உயர்த்தி முன்னும் பின்னும் சாய்ந்து அவர் சொன்ன சொற்கள் விவசாயிகளின் உள்ளங்களில் தீக் கங்குகள் போல விழுந்தன. உள்ளூர் போராட்டத்தைப் பற்றியும், நாட்டில் விவசாயிகளின் நிலைமை பற்றியும் அவர் சுமார் ஒன்றரை மணி நேரம் பேசினார்.

தொடர்ந்து கத்தாளம்பட்டி விவசாயச் சங்கச் செயலாளர், மடத்துப்பட்டிச் செயலாளர், பூதலபுரம் செயலாளர் ஆகியோர் பேசினார்கள்.

கூட்டம் முடிந்ததும் விவசாயிகள் நாளேரு வேலைகளைக் கவனிக்கக் கலைந்தார்கள். முத்தையாவையும் மற்ற விருந்தினர்களையும் கண்ணப்பன் படிப்பகத்துக்குக் கூட்டிச் சென்றான். பொன்னியும் அவள் தோழிகளும் வெளியூர்ப் பெண்களைத் தங்களுடன் அழைத்துச் சென்றார்கள்.


உணவு முடிந்தது. வெளியூர் விவசாயிகள் பெரும்பாலோரும் ஊர்களுக்குக் கிளம்பிவிட்டார்கள். ராமசாமி கண்ணப்பனிடம் வந்து நாளேருக்கு ஆட்கள் தயாராகி விட்டதாகச் சொன்னான். கண்ணப்பன் முத்தையாவையும் தனுஷ்கோடியையும் நாளேர் பார்க்க அழைத்தான். அவர்கள் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார்கள். கண்ணப்பன் அவர்களைச் சுப்பையா வீட்டுக்கு அழைத்து வந்தான்.

சுப்பையா வீட்டில் இல்லை. தன் கணவன் கண்மாய்க் கரைக்கு போயிருப்பதாக மயிலம்மாள் சொன்னாள். அவர்கள் கண்மாய்க் கரைக்கு வந்தார்கள். ஊர்க்காரர்கள் ஆங்காங்கே புதிய தார்க்குச்சுகள் தயார் செய்து கொண்டிருந்தார்கள். அத்திமரத்தடியில் உட்கார்ந்திருந்த பழனியாண்டி தார்க்குச்சிகளில் ஊசி பொருத்திக் கொடுத்துத் தட்சணை வாங்கிக் கொண்டிருந்தார். சுப்பையா தன் வேலையை முடித்துக் கொண்டு அவர்களிடம் வந்தான். அவர் சொன்னார்: "இது ஒரு பழைய வழக்கம். நாளேரு தொடங்குமுன்ன ஏரக் கொண்டு ஆசாரி முன்ன வச்சி பழுது பார்த்துத் தட்சணை கொடுத்துக் கும்புட்டு எடுத்துக்கிட்டுப் போணும். இப்ப அது இல்ல. பழைய மொறக்கித் தார்க்குச்சியை மட்டுஞ் செஞ்சிக்கிர்ரது".

அவர்கள் திரும்ப சுப்பையாவுடன் அவன் வீட்டுக்குப் போனார்கள்.

தொழுவில் கலப்பை, மேற்கால், மேழி, வடம், கயிறு எல்லாவற்றிற்கும் சந்தனம் குங்குமப் பொட்டிட்டு வெற்றிலையும் பூவையும் சுற்றிக் கட்டி வைத்திருந்தாள் மயிலம்மாள். காளைகளின் உடம்பு முழுவதும் பொட்டுகள் துலங்கின. கச்சை கட்டிக் கொண்டு சுப்பையா, கலப்பையையும் மேழியையும் பொருத்தி வடத்தில் இறுக்கிக் கட்டி மேற்காலை கலப்பையின் குறுக்கே வைத்துக் கட்டி கொழுமுனை ஆகாயத்தைப் பார்க்கும் படிச் சாய்த்து வைத்தான். மயிலம்மாள் ஒரு பெரிய தட்டத்தை முற்றத்தில் வைத்து அதில் பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய் படைத்து விளக்கேற்றி வைத்து, பத்தியையும் பொருத்தி பழத்தில் செருகினாள். சுப்பையா கொட்டாங்கச்சியில் இருந்த தீயில் கொஞ்சம் சாம்பிராணித் தூளைப் போட்டு மாடுகள், கலப்பை, தொழு எல்லாவற்றுக்கும் புகை காட்டினான். பின் அவன் ஒரு வெற்றிலையில் திருநீறு எடுத்து அதில் சூடத்தை கொழுத்தி மாடுகளையும் ஏரையும் சுற்றிவிட்டு மனைவியின் பக்கம் நீட்டினான். அவளும் பிள்ளைகளும் சூடச்சுடரைத் தொட்டுக் கண்ணில் போட்டுக்

கொண்டார்கள். அதன் பின் அவன் கொஞ்சம் நவதானியத்தைத் தரையில் தூவி தார்க்குச்சியால் கீய்ச்சிவிட்டான். மயிலம்மாளும் பிள்ளைகளும் ஏரைத் தொட்டுக் கும்பிட்டார்கள். சுப்பையா அவர்களுக்குத் திருநீறு கொடுத்துவிட்டு ஏரைத் தம்பியின் தோளில் தூக்கிவிட்டான். தொழுச் சடங்குகள் முடிந்தன.



சுப்பையா மாட்டைப் பத்திக் கொண்டு அவர்களுடன் கண்மாய்க் கரைக்கு வந்தான். அங்கே மாடுகள் பிரமாதமான அலங்காரங்களுடன் ஜோடி ஜோடியாய் நின்று கொண்டிருந்தன. அங்கிருந்து அவை ஊர்வலமாகப் புஞ்சைக்குப் போயின. பெரிய கண்மாய் புஞ்சையின் கன்னி மூலையில் தான் நாளேர் தொடங்க இருந்தது.

விவசாயிகள் தங்கள் ஏர்களைப் பூட்டிக் கொண்டு வரிசையாக நின்றார்கள். சென்னப்பன் கோவாலு வைத்திருந்த வட்டியிலிருந்து கொஞ்சம் நவதானியத்தை அள்ளி மண்ணில் விதைத்தார். ஒன்றையொன்று துரத்திக் கொண்டு காளைகள் வேகமாக உழுதன. புதிய கொழுமுனைகள் கரிசல் மண்ணைக் கீறிப் புரட்டின. ஒரு சில நிமிடங்களில காடு புழுதியும் கட்டியுமாக ‘கரு கரு’வென்று மாறிப் போயிற்று. அந்த ஆண்டுக்குரிய விவசாய வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டன. பார்வையாளர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். சிலர் மண் வெட்டியிலும் வாய்ச்சத்தாலும் செடிகளை வெட்டினார்கள்.

உழவர்கள் மாடுகளை அவிழ்க்கத் தொடங்கியதும் வேடிக்கை பார்த்தவர்கள் வீடு நோக்கி ஓட்டம் பிடித்தார்கள். விவசாயிகள் மாடுகளை ஊருக்குத் துரத்திக் கொண்டு ஓடினார்கள். நாலு கால் பாய்ச்சலில் வரும் அவைகளைக் கண்டு பயந்து கண்ணப்பனும் அவன் ஆட்களும் ஒரு நொச்சி மறைவில் பதுங்கினார்கள். ‘ஆய்’ ‘ஊய்’ என்று விவசாயிகள் மாடுகளை விரட்டினார்கள்.

கடைசியில் வந்தது முத்துசாமியின் கிழட்டு மாடு. ராமநாதன் தான் அதை துரத்திக் கொண்டு வந்தான்.

“உக்காந்து கொஞ்ச நேரம் கழிச்சிப் போவோம்யா. இப்ப போனா மஞ்சத் தண்ணி ஊத்திப்புடுவாங்க” என்று கண்ணப்பனை ராமசாமி எச்சரித்தான்.

கண்ணப்பன் சொன்னான், “நம்ம மேல ஏன்யா ஊத்தப்போறாங்க. சும்மா போவோம். வேடிக்க பாக்கலாம்” அவர்கள் ஊருக்கு வந்தார்கள்.

“சார்... சார்.....”

கண்ணப்பனின் தலை, முகம், வேட்டி, துண்டு எல்லாம் மஞ்சள் நீர். போத்தியப்பனின் பெண்கள் இருவரும் காப்பிக்கடை வாசலில் நின்று கைகொட்டிச் சிரித்தார்கள். ராமசாமி எத்துக் கொடுக்காமல் ஓடிவிட்டான். மற்றவர்கள் பட்டாளத்துக்காரர் வீட்டில் தஞ்சம் புகுந்தார்கள். அங்கே தயாராக நின்ற அவர் பெண்கள் அவர்களை வசமாய்க் குளிப்பாட்டினார்கள்.

தெருவில் எங்குப் பார்த்தாலும் மஞ்சள் நீர் வீச்சுத்தான். வேட்டியால் முகத்தைத் துடைத்துக் கொண்டே எதிரே வந்த கோவாலு கேட்டான், “ஒங்களையும் முழுக் காட்,டிப் புட்டாளுகளா?”

“ஊரோடச் சேந்த பெறகு இதுக்குத் தப்ப முடியுமா?”. கண்ணப்பன் ஆனந்தமாகச் சிரித்தான்.

**பொன்னீலன்**

## செயல்பாடுகள்

**கருத்து வெளியிடுதல்**

“தெருவில் எங்குப் பார்த்தாலும் மஞ்சள் நீர் வீச்சுத்தான். வேட்டியால் முகத்தைத் துடைத்துக் கொண்டே எதிரே வந்த கோவாலு கேட்டான், ” ஒங்களையும் முழுக்காட்டிப் புட்டாளுகளா? ”

“ஊரோடச் சேந்த பெறகு இதுக்குத் தப்ப முடியுமா? ” கண்ணப்பன் ஆனந்தமாகச் சிரித்தான்.”

- மஞ்சள் நீர் வீச்சு எதற்காக? ஏன்?
- கோவாலு கண்ணப்பனைக் கேட்ட கேள்வியிலும் கண்ணப்பன் அதற்களித்த பதிலிலும் பொதிந்துள்ள கருத்துகளை வெளிப்படுத்துக.
- இந்தப் பாடப்பகுதியில் உங்கள் மனதைக் கவர்ந்த கதாபாத்திரம் எது? ஏன்?

**குறிப்பு எழுதுதல்**

பாடப்பகுதியில் வரும் நாளேரு சடங்கு, தொழுச்சடங்கு ஆகியவற்றின பின்னணியிலுள்ள விவசாயக் கூட்டுறவு, பண்பாட்டுக் கூறுகள் பற்றி உங்கள் கருத்துகளை குறிப்பாக எழுதுங்கள்.

**வரவேற்புரை எழுதுதல்**

பாடப்பகுதியில் வரும் விவசாய சங்கத்தலைவர் திரு. முத்தையா அவர்கள் உங்கள் வட்டாரத்தில் உழவர் திருநாளன்று சொற்பொழிவு ஆற்ற வருகிறார். அவரை வரவேற்க ஊர் மக்கள் சார்பில் வரவேற்புரை எழுதுங்கள்.

**நேர்முக வர்ணனை செய்தல்**

பாடப்பகுதியில் விவசாய சங்கத்தின் அடிக்கல் நாட்டுவிழா நடைபெறுகிறது அல்லவா?. அதில் வரும் நிகழ்ச்சிகளை நேர்முக வர்ணனையாக எழுதவும்.

**திருந்திய தமிழில் எழுதுதல்**

"இதென்ன? ஒரு புள்ளையாரப் புடிச்சி, அறுகம் புல்லக் குத்தி வைக்கிறதுக்குமா பஞ்சமாப் போச்சி." கெங்கண்ணன் முணுமுணுத்தான்.

" வேணும்னா நீ தலையில அறுகம் புல்ல செருகிக்கிட்டு வந்து உக்காரு " என்றான் ராமநாதன்.

"ஓ ......... அப்படியா, வணக்கம்மா. வீரையனுக்கு நீங்க தொணையா அமஞ்சதில நாங்கல்லாம் ரெம்பப் பெருமைப்படுறோம்மா. "

**சொல் வழக்காறுகளை அறிதல்**

பின்வரும் சொல் வழக்காறுகள் சுட்டுகின்ற பொருளை எழுதுங்கள்.

- முழுக்காட்டிப் புட்டாள்
- புள்ளையாரப் புடிச்சு வச்சது போல
- ஒழுங்கு வேண்டாமா?
- பக்கப் பாட்டு பாடுதல்
- எத்துக் கொடுக்காமல்

**அடுக்கி வரும் சொற்கள்**

கீழ்க்காணும் தொடர்களைக் கவனியுங்கள். ஒரு முறை வந்த சொல்லே மீண்டும் வருகிறதல்லவா? இவ்வாறு ஒரே சொல் அடுக்கி வரும் தொடர்களைப் பாடப்பகுதியிலிருந்து தேர்வு செய்து எழுதுங்கள்.

- வாங்க வாங்க
- திரும்பித் திரும்பி
- 
- 
- 

# வழக்காற்றில் வேளாண்மை

நாட்டுப்புற இலக்கியங்களுள் பழமொழி இலக்கியமும் ஒன்று. பழமொழிகளுக்குரிய இலக்கணத்தை தொல்காப்பியமும் பழமொழி பற்றிய சிறப்புகளைச் சங்க இலக்கியமும் நல்குகின்றன. மனிதன் தோன்றிய காலத்தில் அவனுக்கு இன்னல்கள், ஊறுகள் இவற்றின் வழியாகக் கிடைத்த அனுபவத்தின் வெளிப்பாடே பழமொழியாகும். பழமொழிகளின் தன்மைகளை நோக்கின் பழமொழிகள் எந்த அளவுக்குச் சமுதாயத்தில் பயன்பட்டன என்பதற்குச் சான்றாக, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான பழமொழி நானூறைக் கூறலாம். இதற்குப் பின் சிறிது சிறிதாகப் பழமொழிகள் எல்லா நிலையிலும் உருவாக்கம் பெற்றன. சமுதாயம், கல்வி, தொழில், விலங்கு, பறவை, உணவு ஆகிய பல பொருள்களை அடிப்படையாகக் கொண்டு பழமொழிகள் தோன்றியுள்ளன.

## உழவுத்தொழில் தொடர்பான பழமொழிகள்

வேளாண்மைத் தொடர்பான நூல்கள் எழுதத் தொடங்கிய (1890 லிருந்து) காலத்தில் ஆசிரியர்கள் பழமொழிகளை மிகுதியும் பயன்படுத்தியுள்ளமையை நூல்களின் வழி அறிய முடிகிறது. ‘விவசாய நூல்’ முதற்புத்தகம் எனும் நூலின் ஆசிரியர் ஒவ்வொரு பாடத்தின் தொடக்கத்திலும் பழமொழிகளைக் கூறிப் பின்னரே பாடத்தையும் தொடங்கி உள்ளார். இப்பகுதியில் உழவுத்தொழிலின் பெருமை, நிலம், உழவு, விதைவிதைத்தல், நீர்ப்பாய்ச்சல், எரு இடல், வேலி முதலிய ஒவ்வொரு நிலைகளிலும் பழமொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## உழவுத்தொழிலின் பெருமை

உழவுத்தொழில் செய்வது என்பது இந்நாட்டின் இன்றியமையாத் தொழிலாகும். இதனையே, “சேற்றில் கால் வைத்தால் தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும்.” எனும் பழமொழி மிக அழகாகக் கூறுகிறது.

ஓதுவான் எல்லாம் உழுவான் தலைக்கடையில்

தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது.

போன்ற பழமொழிகள் விவசாயத்தின் பெருமையைக் கூறுவதாக அமைந்துள்ளன. பல அரிய நூல்களைக் கற்றிருந்தாலும் இறுதியில் அவன் உழுதுபயிர் செய்கின்றவனைத் தான் நாடிச் செல்ல வேண்டிய நிலை இன்று வரை காணப்படுகிறது. இந்நிலை என்றென்றும் நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.

மற்றவர்களிடம் சென்று இரந்து வாழ்வதைக் காட்டிலும் பயிர்த்தொழில் செய்து, அவற்றினின்று கிடைக்கும் உணவை உண்டு வாழ்வது மிகுந்த இன்பத்தைக் கொடுக்கும்.

**நிலம்**

எவ்வகைப்பட்ட நிலமாக இருப்பினும் தன்னுடைய நிலத்திற்கருகில் இருந்தால் அது விற்பனைக்குப் போகும்போது பயிர்த்தொழில் செய்பவன், அதைத் தனதாக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என்பதைக் குறிக்க,

'கச்ச நிலமானாலும் கைசேர்க்கை நன்று'

என்னும் பழமொழி வழங்கப்படுகிறது.

ஏனென்றால், அந்நிலம் பிறருடைதாக மாறும்போது குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புண்டாகிறது. இத்துடன் தன் நிலத்திற்கருகில் இருந்தால் கவனித்துக் கொள்ளுதலும் எளிது. இக்கருத்தையே,

'அண்டை நிலத்தையும் அயல் மனையையும் கைவிடாதே'

எனும் மற்றொரு பழமொழியும் வலியுறுத்துகிறது.

அடுத்ததாக, மண்ணின் தன்மையைப் பொறுத்தே பயிர் செய்ய வேண்டும் என்பதை விளக்குவதாக,

'மணலுழுது வாழ்ந்தவனும் இல்லை

மண்ணுழுது கெட்டவனும் இல்லை'

எனும் பழமொழி அமைகிறது.

மணலில் பயிர் செய்தல் இயலாது என்பதால் மணலை உழுது வாழ்ந்தவன் இல்லை என்றும், பயிர் செய்வதற்கேற்ற மண்ணை நன்கு பக்குவப்படுத்தியவன் வாழாமல் போனதுமில்லை என்றும் இப்பழமொழி எடுத்துரைக்கின்றது. இங்கு மண் என்பது உழவுத் தொழிலுக்கேற்ற நிலம் என்பதையும், மணல் உழவுத் தொழிலிற்கு ஒவ்வாத நிலம் என்பதையும் குறிப்பது கவனிக்கத்தக்கது.

**உழவு**

நிலத்தை உழும் முறை, மற்றும் எவ்வளவு ஆழத்திற்கு மண் உழப்பட வேண்டும் என்ற அளவு ஆகியன பற்றிய செய்திகளைக் கொண்டுள்ளதாக உழவுப் பழமொழிகள் அமைந்துள்ளன.

'வெண்ணை போல் உழவும் குண்ணுப் போல் விளைவும்'

எனும் இப்பழமொழியில் உழவு செய்வதற்கு ஏற்ற நிலமாக மாற்ற, மண்ணை நன்கு உழவேண்டும்; வெண்ணை போன்று மண் சிறு சிறு அளவில் மாற்றம் பெறும் வரையில் நிலத்தை நன்கு உழுதல் வேண்டும். அப்பொழுது தான் பயிர் நன்கு விளைந்து குன்றளவு நெல் குவியலைத் தரும் என்னும் உண்மை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'சாண் உழவு முழு உருவுக்குச் சமம்'

'தாழ உழுதால் தளிரோடும்'

'ஆழ உழுதல் ஆட்டுரத்துக்கும் அதிகம்'

முதலாவது பழமொழி, சாண் உழவு உழுதால், அது முழு எருவுக்குச் சமமாக அமையும் என்றும், இரண்டாவது, தாழ உழுதால் பயிர் நன்கு வளரும் என்றும், மூன்றாவது ஆழ உழுதால், நிலம் ஆட்டுரத்தை இட்ட நிலத்தைக் காட்டிலும் நன்றாக இருக்கும் என்றும் உழுதலின் தேவையை விவரிக்கின்றன.

மேற்கூறிய பழமொழிகளின் வழி மேல் மண், கீழ்மண் ஆகியவை நன்கு கலக்க வேண்டும் என்பதை அறிய முடிகிறது. மேற்கூறியவாறு செய்யாமல் இருந்துவிட்டு, பின்னர் பயிர் விளைந்த காலத்து, எவ்வளவு எருப்போட்டாலும் பயிர் நன்கு விளையாது என்பதனை,

'உழவிலும் பகை எருவிலும் தீராது'

எனும் பழமொழி தெளிவாக்குகிறது.

**விதை விதைத்தல்**

பயிர் நல்ல விளைச்சலைக் கொடுப்பதற்கு நல்ல விதைகளைத் தேர்ந்தெடுத்தல் தேவையாகும். அத்துடன் விதைகளை விதைக்கும் பொழுது, மண்ணின் தரத்தையும் நோக்க வேண்டும் என்பதைப் பழமொழிகள் எடுத்துரைக்கின்றன. விதைகள் நன்கு காய்ந்தால் முளைக்கும் போது அவை வீணாவதில்லை என்பதைக்,

'காய்ந்த வித்துக்குப் பழுதில்லை'

எனும் பழமொழி விளக்குகிறது.

விதை விதைக்கும் போது மண் ஈரமாக இருத்தல் கூடாது. அதே நேரத்தில் மிகுந்த வெயிலும் இருத்தல் கூடாது. ஈரமாக இருப்பின் விதைகள் விரைவில் அழுகியும் வெயிலாக இருப்பின் விதைகள் மண்ணோடு கலவாதும் 'போய்விடும்' என்ற இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு,

'ஈர விதைப்பும், ஈரூர் வேளாண்மையும் தாமிரண்டும்

தனக்குப் பகை'

என்னும் பழமொழி அமைந்துள்ளது.

நிலத்தில் விதைகளை நெருக்கமாக விதைத்தால் நெற்பயிர் விளையாது. அதனால் விதைகளைப் பரவ விதைக்க வேண்டும். அப்பொழுது தான் களஞ்சியம் நிறையும். விதைகள் ஒன்றோடொன்று நெருங்கி வளர்வதால் நெல்லில் வைக்கோல் தான் மிகுதியாகும் என்ற அறிவியல் உண்மையை

கலக்க விதைத்தால் களஞ்சியம் நிறையும்

அடர விதைத்தால் அடுபோர் உயரும்

என்னும் பழமொழி எடுத்தியம்புகின்றது.

**நீர்ப்பாய்ச்சல்**

பயிர்த்தொழிலுக்கு மிகவும் இன்றிமையாத ஒன்று நீர். தண்ணீரின் தேவை, பயன்படுத்தும் முறை முதலியவற்றைப் பற்றிய பழமொழிகளும் உள்ளன.

‘வரப்புயர நீர் உயரும்

நீர் உயர நெல் உயரும்’

‘நீர்வளம் உண்டானால் நிலவளம் உண்டு’

‘பாய்ச்சலும் உண்டு காய்ச்சலும் உண்டு’

மேற்கூறிய பழமொழிகளில் முதலாவது நீரின் அளவினையும், இரண்டாவது நீரின் வளத்தைப் பற்றியும், மூன்றாவது நீரினைப் பாய்ச்சுவதோடு வரப்பு கட்டித் தண்ணீரைத் தேக்கி வைத்தல் வேண்டும் என்பது பற்றியும் விளக்குகின்றன.

**எரு இடல்**

பயிரை நன்கு உழுது, தண்ணீர் பாய்ச்சினாலும் இயற்கை உரங்களை இடுதல் இன்றியமையாததாகும் உழுதல் எருவுக்குச் சமமாக கருதப்பட்டாலும் எரு இடுதலை முக்கியமான ஒன்றாகச் சிற்றூர்களில் கருதுகின்றனர். இக்கருத்தையே,

‘எரு இல்லா வயல் கன்றில்லா மாட்டைப்போல்’

எனும் பழமொழி தெளிவுறுத்துகின்றது.

ஒருவனிடம் எரு ஏராளமாயிருந்தால், அவன் பயிர் செய்வதில் வல்லவனாகி விடுவான். ஏனென்றால் இன்று அறிவியல் வளர்ச்சியில் செயற்கை உரங்கள் பல பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் , செயற்கை உரங்கள் பயன்படுத்தத் தொடங்கும் முன்பு, ஒருவன் இயற்கை உரங்களை அதிகம் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டி ய நிலை இருந்தது. தழை, சாணம், எலும்பு போன்ற பொருட்களைச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டியது மிகவும் தேவை என்பதன் அடிப்படையில்

‘எரு ஏராளமாயிருந்தால் மடையனும் பயிரிடுவதில்
வல்லவனாகி விடுவான்’.

என்னும் பழமொழி உருவாகியிருக்கலாம்.

**வேலி**

பயிர் வளர்ந்து வரும்போது ஆடு மாடுகள் மேய்ந்து விடாமல் இருக்க வேலியிடுவது அவசியம். வேலியிடுதற்குரிய காலத்தை,

'விதைக்கு முள்வேலி அடை'

'பயிரிட்டு வேலிகட்டாதே'

என்று விதை விதைக்கும் முன் வேலி கட்டுதல் இன்றியமையாதது என்பதையும், பயிர் விளைந்த பின்பு வேலி போடுதல் கடினமான செயல் என்பதையும் பழமொழிகள் விரித்துரைக்கின்றன. இவ்வாறு வேளாண்மைப் பழமொழிகள் பயிர்த்தொழில் பற்றி விரிவான செய்திகளை எடுத்துரைப்பனவாக அமைகின்றன.

## செயல்பாடுகள்

**ஒப்பிடுதல்**

"ஓதுவான் எல்லாம் உழுவான் தலைக்கடையில்"

"தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது "

– என்னும் பழமொழிகள் கூறும் கருத்தினை உழவுத் தொழில் பற்றிய வள்ளுவர் பாடல்களோடு ஒப்பிடுக.

**களப்பயணம் மேற்கொள்ளுதல்**

'கடவுளெனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி'. அவ் விவசாயிகள் இன்று அனுபவிக்கும் பிரச்சினைகளையும் இன்னல்களையும் களப்பயணம் மேற்கொண்டு கண்டு அல்லது கேட்டறிந்து கருத்துகளைத் தொகுக்கவும்.

**புகார்க் கடிதம் எழுதுதல்**

தொகுத்த செய்திகளின் அடிப்படையில் வேளாண்மை உயர் அதிகாரிக்கு அனுப்ப விவசாயிகளின் பிரச்சினைகள் பற்றிய புகார்க் கடிதம் ஒன்று எழுதவும்.

**கருத்து வெளியிடுதல்**

- 'எரு ஏராளமாய் இருந்தால் மடையனும் பயிரிடுவதில் வல்லவனாகி விடுவான்!'

இப்பழமொழி உணர்த்தும் கருத்தினை வெளிப்படுத்துக.

**திரட்டுதல்**

வேளாண்மைத் தொடர்பாக அமைந்துள்ள நாட்டுப்புறப் பாடல்களைத் திரட்டவும். அவற்றுள் சிறந்தது எது என்று நீங்கள் கருதும் நாட்டுப்புறப் பாடலை மெட்டமைத்து,, உங்கள் பள்ளி ஆண்டு விழாவில் நீங்கள் பாடலாம் அல்லவா?

**வேளாண்மலர் வெளியிடுதல்**

இதுவரை திரட்டிய கவிதைகள், கட்டுரைகள், கருத்தரங்கு அறிக்கை, நேர்காணல், பழமொழிகள், திரைப்படப் பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள், போன்றவற்றைத் தொகுத்து 'வேளாண் மலர்' ஒன்று தயாரித்து உழவர் திருநாளன்று வெளியிடவும்.

**வாக்கியமாக எழுதுதல்**

மாதிரியில் காட்டியிருப்பது போன்று கீழ்வரும் சொற்களைச் சேர்த்துப் பொருள் அமையும் வாக்கியங்களாக எழுதுக.


**மாதிரி:** சேரர், சோழர், பாண்டியர் (வா)

சேரரும் சோழரும் பாண்டியரும் வந்தனர்.

- பழம், பாக்கு, வெற்றிலை, வழிபாடு (செய்)
- ஆசிரியர், மாணவர், அலுவலர், சுற்றுலா (செல்)
- இயல், இசை, நாடகம், தமிழ் முன்று பிரிவுகள் (ஆதல்)

# ②

# கலையும் வாழ்வும்




மேற்காணும் படத்தில் உள்ள நாட்டுப்புறக்கலைகளின் பெயர்களைத் தமிழ்நாட்டு நாட்டுப்புறக்கலைகள், கேரள நாட்டுப்புறக் கலைகள் ஆகிய தலைப்புகளின் கீழ் வரிசைப்படுத்துங்கள்.

# நாடகமே உலகம்

கரகம், காவடி, அனுமன் ஆட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், குறவன் குறத்தி ஆட்டம், பகல் வேஷம், கோலாட்டம், கும்மி, ஒயிலாட்டம், தேவராட்டம், தப்பாட்டம், கொக்கலிக்கட்டை ஆட்டம், தெருக்கூத்து, கணியான் கூத்து, வில்லுப்பாட்டு... என்று மண்ணின் மணத்தையும் கலைத்திறத்தையும் பறைசாற்றும் தமிழக நாட்டுப்புறக்கலைகள் பல உண்டு.

நாட்டுப்புறக் கலைகள் அழகியல் சார்ந்தவை; கிராமிய மணத்தோடு படித்தவர்களுக்கு மட்டுமின்றி பாமரர்களுக்கும் உரியவை; தனிமனிதக் கற்பனைக்கும் கூட்டு நிகழ்வுக்கும் வழி வகுப்பவை. எளிமையான உள்ளடக்கம் இக்கலைகளை மக்களுக்கு மிகவும் நெருக்கமாக்கியுள்ளன. மக்கள் வாழ்வோடு இணைந்த இந்தப் பண்பாட்டுக் கலை வடிவங்கள் மக்களுக்கு நீதி போதனைகளுடன் நல்ல பொழுது போக்காகவும் இருக்கின்றன. மக்களின் சமய, சடங்குகளோடு பின்னிப் பிணைந்து இருப்பதால் இன்றளவும் முற்றிலும் அழிந்து விடாமல் இருக்கின்றன. ஆனாலும் கால வெள்ளத்தில் இவை நம் கண்ணெதிரே நசிந்து கொண்டிருக்கின்றன. இம்மண்ணில் முகிழ்த்த கிராமியக் கலை வடிவங்களை வறுமையின் பிடியிலும் விடாப்பிடியாக விடாமல் இருக்கும் பல கிராமியக் கலைஞர்களும் உண்டு. இக்கலைஞர்கள் மூலமாக எஞ்சியிருக்கும் கலைவடிவங்களைக் காக்க வேண்டிய பொறுப்பு தமிழருக்கு உண்டு.

திரைப்படமும் தொலைக்காட்சிகளும் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளைக் காட்டினாலும் அவை இக்கலையை அரைகுறையாக அறிய மட்டுமே உதவும். அத்துடன் சினிமா கலாச்சாரத்தின் தாக்கம் நாட்டுப்புறக்கலைகளில் ஊடுருவி அவற்றை நீர்த்துப்போகச் செய்து வருகின்றது.

நாட்டுப்புறக்கலைகள் குறித்த ஆய்வுகள் சமீப காலங்களில்தான் பல்கலைக்கழக நிலையில் முக்கியத்துவம் பெறத் தொடங்கியிருக்கின்றன. இக்கலைகள் பற்றிய வரலாற்றுப் பதிவுகளுக்கு இவை உதவியாக இருக்கும். ஆனால் இதன் மூலமாக மட்டுமே கலைகளை அழிந்து விடாமல் காப்பாற்றி விட முடியாது.

“....கலாச்சாரத்தின் உட்கூறுகளாகிய கலை, இலக்கியங்கள் ஆகியவற்றின் ஆதார சுருதியான ஆன்மாவைக் காயப்படுத்தாமல், சமூக வளர்ச்சிக்கேற்ப அவற்றை வளர்த்தால் மட்டுமே சிறந்த கலைவடிவங்களைப் பெற இயலும். ஆக, அவற்றின் ஆன்மாவை அடையாளங் கண்டு கொள்வதற்காக முதலில் அத்துறைச் சேகரிப்புகளும் பின் அவற்றின் மீதான ஆய்வுகளும் மிகவும் இன்றியமையாதனவாகின்றன என்று தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத்துறைப் பேராசிரியர் மு. ராமசாமி கூறியிருப்பதை இந்த இடத்தில் நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

இனி, தமிழகத்தின் தெருக்கூத்து மற்றும் நாட்டுப்புறக் கலைகள் பற்றிய சுருக்கமான அறிமுகம் இடம் பெறுகிறது.

## தெருக்கூத்து

“தெருக்கூத்து” என்ற நிகழ்கலை தென்னார்க்காடு, வடார்க்காடு உள்ளிட்ட சில மாவட்டங்களில் பல தலைமுறைகளாக இருந்து வருகிறது. இதில் தெற்கத்திப்பாணி, வடக்கத்திப்பாணி என்ற இரு பாணிகள் உண்டு. தென்னார்க்காடு மாவட்டம் புதுச்சேரியில் தெற்கத்திப்பாணியும் வடார்க்காடு, திருவண்ணாமலை, செங்கல்பட்டு மாவட்டங்களில் வடக்கத்திப்பாணியும் உள்ளது.

திரௌபதி அம்மன் விழாக்களிலும் வேறு பல கிராம விழாக்களிலும் தெருக்கூத்து நடத்தப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. பெரும்பாலும் ராமாயண, மகாபாரதக் கதைகளே நடிக்கப்படும்; இரவில் தொடங்கி விடிய விடிய நடக்கும். கிராமமே கூடி கூத்துக்கு ஏற்பாடு செய்கிறது.

பாஞ்சாலி கோவிலுக்கும் தெருக்கூத்துக்கும் தொடர்பு உண்டு என்று கருதுகிறார் கூத்துப் பட்டறைச் சேர்ந்த ந. முத்துசாமி. முன்பு பாஞ்சாலி கோவில் இருந்த இடத்தில் மகாபாரதக்கூத்து நடத்தப்பட்டுள்ளது. செஞ்சியில் பாஞ்சாலி கோவில் இல்லாத இடங்களில் செஞ்சியிலிருந்து மண் எடுத்து வந்து பாரதக் கூத்து நடத்தப்படும் வழக்கம் உள்ளது. எனவே செஞ்சிக்கும் தொடர்பு இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றின் கூறுகளைக் கொண்டிருக்கும் தெருக்கூத்து மக்களோடு இயைந்த கலை. அலங்காரமான நாடக மேடைகளோ காட்சித்திரைகளோ இல்லாமல் எளிமையாக தெருவிலும் திறந்த வெளியிலும் நடைபெறுகிறது.

பாடல்கள், ஆட்டங்கள், வர்ணங்கள் ஜொலிக்கும் உடைகள், கிரீடங்கள், முக அலங்காரங்கள் மூலமாகப் புராண, இதிகாசக் கதைகள் சுவாரஸ்யமாகச் சொல்லப்படுகின்றன. முகவீணை(மிகச்சறிய நாகஸ்வரத்தைப் போன்ற வாத்தியக்கருவி), ஹார்மோனியம், மிருதங்கம், ஜால்ரா போன்ற இசைக்கருவிகள் மனிதக் குரல்களுடன் சேர்ந்து பின்பாட்டாகத் தொடர்ந்து கூத்துக்குச் சுவையூட்டுகின்றன. ஆடிப்பாடி கதை சொல்வதுடன் வசனத்திலும் கதை சொல்லப்படுகிறது. இதனால் பார்ப்பவர்களுக்கு அலுப்பு ஏற்படாது.

ஒவ்வொரு பாத்திரமும் மேடையில் நடிக்க வரும்போது இரண்டு பேர் மேடையில் திரையைப் பிடித்துக் கொள்கிறார்கள். திரைக்குப்பின்னால் நடிகர் ஆடிப்பாடுகிறார். திரைக்குப் பின்னால் இருப்பது யார் என்று பார்வையாளர்கள் ஆர்வத்துடன் இருக்கும் போது திரையை விலக்கிக் கொண்டு நடிகர் தனது ஜோடனைகளுடன் தோன்றுகிறார்.

கூத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் கட்டியங்காரன். பார்வையாளர்களுக்கும் நடிகர்களுக்கும் பாலம் போல இருப்பவன் கட்டியங்காரன். புரியாத விஷயங்களைத் தனது சுவாரஸ்யமான பேச்சுவன்மையால் புரிய வைப்பதும், பார்வையாளர்களின் கவனம் முழுக்க கூத்தை நோக்கியே இருக்கும் படி சிரிக்க வைப்பதும் கட்டியங்காரனின் வேலை.

தூரத்தில் இருக்கும் பார்வையாளர்களுக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் பாடல்களும் வசனங்களும் உரத்த குரலில் பாடப்படுகின்றன.

தெருக்கூத்தில் மக்கள் பங்கெடுப்பது என்பது தொன்று தொட்டு மரபாக இருந்து வருகிறது. துரியோதன வதம் நிகழும் பொழுது மக்கள் எல்லோரும் அவனது ரத்தத்தை நெற்றியில் பொட்டாக இட்டுக் கொள்கின்றனர். ஊர் மக்கள் அனைவரும் ஒப்பாரி வைக்கின்றனர். இதில் ஊரே கலந்து கொள்வது போல இருக்கின்றது.

மாறிவரும் சூழ்நிலையில் தெருக்கூத்துக் கலை நலிந்து வந்துள்ளதற்குக் காரணம் உரிய பொருளாதார உதவி இல்லாததே. புரிசை கண்ணப்பத் தம்பிரான் போன்றவர்கள் கூத்தைக் கைவிடாமல் தொடர்ந்து அதன் பாரம்பரியச் சிறப்புடன் நடத்தி இக்கலையின் மீது உள்ள தங்களது ஈடுபாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர். கூத்துக்கலையை அழியாமல் காக்கும் பணியில் கூத்துப்பட்டறை உள்ளிட்ட சில அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. கேரளத்தில் உள்ள கதகளி, கூடியாட்டம், கர்நாடகத்தில் உள்ள யக்ஷகானம், ஆந்திரத்தில் உள்ள வீதி நாடகம் ஆகியவற்றுக்கு இணையானதாகக் கருதப்படும் தெருக்கூத்தையும் அழியாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு.

**பொன். தனசேகரன்**

# செயல்பாடுகள்

**நாடோடி நாடகத்தை அறிதல்**

'தெருக்கூத்து ஒரு நாடோடி நாடகம்' என்பதற்கான சான்றுகளைத் தருக.

**சிறுகட்டுரை எழுதுதல்**

'இன்றைய நாடகத்தில் தெருக்கூத்தின் செல்வாக்கு' என்பது பற்றிச் சிறுகட்டுரை வரைக.

**விமர்சனம் செய்தல்**

சமூக விமர்சனத்தின் கூறுகள் நாடோடி கலைகளில் உண்டு என்பதற்குச் சான்றாவது தெருக்கூத்து – நிறுவுக.

**அறிவிப்பு தயார் செய்தல்**

முத்தமிழும் ஒருங்கிணைந்து, தமிழ் நெஞ்சைப் பறி கொள்ளும் தெருக்கூத்து, உங்கள் ஊரில் நடைபெறும் நிலையில் அதற்கான அறிவிப்பு ஒன்று தயார் செய்க.

**ஒப்பிடுதல்**

தெருக்கூத்து, கதகளி ஆகிய இரண்டையும் ஒப்பிடுக.

# ஓட்டன் துள்ளல்

ஒரு கலைஞருக்கு ஏற்பட்ட தன் மான உணர்வால் தோன்றிய ஒரு புதிய கலை வடிவமே ஓட்டன் துள்ளல்.

குஞ்சன்நம்பியார் என்பவர் ஒரு சிறந்த கவிஞர். நினைத்தவுடன் ஒரு நிகழ்ச்சியை – பொருளைப் பற்றிப் பலவிதமான கவிதைகளை இயற்றும் ஆற்றல் உள்ளவர். கேரளத்தில் அம்பலப்புழை என்னும் இடத்தில் உள்ள கோவிலில் 'மிழா' என்னும் தாளவாத்தியக் கருவியை வாசித்து வந்தார். இது சுமார் மூன்றடி உயரத்தில் நீண்ட பானை போன்றது. வாய்ப் பாகம் சற்று சாய்ந்தது. அதில் தோல் கட்டப்பட்டிருக்கும்.

இந்த வாத்தியக்கருவி 'சாக்கியார் கூத்து' என்னும் ஒரு கேரளக் கோவில் கலைக்குப் பயன்படுத்தப்பட்டது. இந்தக் கலை நிகழ்ச்சியை நிகழ்த்துபவரைச் 'சாக்கியார்' என்று கூறுவார்கள். ஒரு சமயம் சாக்கியார் கூத்தொன்றில் குஞ்சன் நம்பியார் மிழா வாசித்துக் கொண்டிருந்தார். சாக்கியார் பாடும் போதெல்லாம் இவர் அந்த தாளவாத்தியத்தை வாசிக்க வேண்டும். அவர் பேசும்போது நிறுத்த வேண்டும். ஒரு சமயத்தில் சாக்கியார் நீண்ட நேரம் பேசிக்கொண்டே இருந்ததால், சற்று அசிரத்தையுடன் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தார் குஞ்சன் நம்பியார். அவர் திடீரென்று பாடத் தொடங்கியபோது மிழாவை வாசிக்காமல் விட்டுவிட்டார். தன்னுடைய பாடலுக்கு ஏற்ப தாள சப்தம் கேட்காததால் திகைத்த சாக்கியார் திரும்பிப் பார்த்தபோது குஞ்சன் நம்பியார் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தார்.

பயங்கர கோபம் வந்தது அவருக்கு. குஞ்சன் நம்பியாரை இடத்தைவிட்டு எழுந்திருக்கச் சொல்லி, அவரை அவமதிக்கும் விதத்தில் அரங்கத்திலேயே கேலியாகப் பேசி, நையாண்டி செய்து, பார்த்துக் கொண்டிருந்த ஜனங்களையும் கேலியாகப் பேச வைத்து விட்டார் சாக்கியார். மனம் புண்பட்டுப் போய் தலைகுனிவுடன் சென்ற குஞ்சன் நம்பியார் வீட்டிற்குச் சென்றதும் நடந்ததை நினைத்து அழவில்லை. அதற்குப் பதிலாகத் தன்னை அவமானப்படுத்தியவரைப் பழிக்குப்பழி வாங்கியே தீருவேன் என்ற சபதம் எடுத்தார்.

அவரது கற்பனைகள் மின்னல் வேகத்தில் – 'பளிச் பளிச்' சென்று வெளிப்பட்டன.

இரவு முழுவதும் கண்விழித்திருந்து ஒரே இரவில் ஒரு புதிய காவியத்தைப் பாடல்களுடன் – புதிய உத்திகளுடன் நடத்தும் விதத்தில் எழுதி முடித்தார்.

மறுநாள் மாலை, முதல் நாள் தான் அவமானப்படுத்தப் பட்ட அதே கோவிலில், அதே நேரத்தில் – அவமதித்த அதே சாக்கியார் வந்து நடத்திக் கொண்டிருந்த இடத்திற்கு, வெகு அருகில் தன்னுடைய புதிய கலைக்குத் துள்ளல் என்ற பெயரைச்சூட்டி 'சௌகந்திகம்' என்னும் கதையை அரங்கேற்றினார். இந்தப் புதிய கலைவடிவம், சாக்கியார் நடத்திய கூத்தைவிட, பார்த்து மகிழும்படியாகவும், ரசிக்கும்படியாகவும், கருத்தைக் கவருவதாகவும் இருப்பதைக் கண்ட மக்கள் – சாக்கியார் நிகழ்த்திய கூத்தைப்

பார்ப்பதை விட்டுவிட்டு, குஞ்சன் நம்பியார் புதிதாக உருவாக்கிய கலைவடிவமான துள்ளலைக் காணத் திரளாக வந்தனர். இப்படித்தான் குஞ்சன் நம்பியார் ஒரு புதிய கலை வடிவத்தை கேரளத்துக்குத் தந்தார்.

இவ்வாறு, ஒரு கலைஞருக்கு நேர்ந்த அவமானத்தால் வெளிப்பட்ட தன்மான உணர்வால் புதியதோர் கலைவடிவம் தோன்றியது.. கேரளத்தில் திருவிழா நேரங்களில் மிக அதிகமாக நடத்தப்படுவது இந்தத் துள்ளல் பிரிவைச் சேர்ந்த ஓட்டன் துள்ளல் கலை நிகழ்ச்சியே. துள்ளலின் இதர பிரிவுகள் சீதங்கன் துள்ளல், பறையன் துள்ளல் ஆகியவை. பறையன் துள்ளல் பாடல், பேச்சு, நடனம், முத்திரை, நடிப்பு எல்லாம் கலந்த துள்ளல். ஒருவர் மட்டுமே நிகழ்த்தும் கலைநிகழ்ச்சி இது. நாட்டிய சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. பெரும்பாலான இதர கேரளக் கலைகள் சமஸ்கிருதத்தில் நிகழ்த்தப்படும்போது, இது மலையாளத்தில் நிகழ்த்தப்படுகிறது.

சாதாரணமானவர்களும் ரசித்துச் சிரிக்கலாம். துள்ளல்களுள் பெரும்பாலானோர் விரும்புவது ஓட்டன்துள்ளல்தான். ஆம்; இந்தக் கலைநிகழ்ச்சியில் நகைச்சுவை முதன்மை பங்கு வகிக்கிறது. அதே சமயத்தில் கோப உணர்ச்சியையும் அவ்வப்போது பிரதிபலிக்கிறது. இந்தக் கலை நிகழ்ச்சி நமது சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைப் பற்றி, சில சமயங்களில் நாம் நடந்து கொள்ளும் முறைகளைப்பற்றி, நமது போலித்தனமான வாழ்க்கையைப்பற்றி. மாற வேண்டிய மனோபாவங்களைப்பற்றி. நையாண்டியாகவும். சில சமயங்களில் கோபத்துடனும் அமையும். வெறுப்புணர்ச்சி. கோபம். அலட்சியம்,, .அவமதிப்பு ஆகிய உணர்ச்சிகள் அவரிடமிருந்து வெளிப்படும். வெறுப்புடன் கலந்த கோபம் கொப்பளிக்கும் . அதே சமயத்தில் அடுத்த நிமிடமே பார்வையாளர்களை வாய்விட்டு நீண்ட நேரம் சிரிக்கவும் வைத்திடுவார். இதுதான் இந்தக் கலையின் தனிப்பட்ட கூறாகும்.



முகத்தில் பச்சை வண்ணம்பூசி தலையில் அலங்கார கிரீடம் அணிந்திருப்பார்;. கழுத்தில் மணியால் ஆன மாலைகள்; கைகளில் விதவிதமான அலங்காரங்கள்; இடுப்பின் கீழ் சிவப்பு நிறமும் வெள்ளை நிறமும் கலந்த வண்ண ஆடை; கால்களில் சலங்கை சாதாரணமாகக் காணப்படும்.

இந்த ஆடை அலங்காரம் மகாவிஷ்ணுவை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டது என்றும் சிலர் கருதுகிறார்கள்.

தலையில் அணிந்த கிரீடம், அனந்தனின் (பாம்பு) தலைகளையும் , இடுப்பில் சுருள் சுருளாகக் காணப்படும் ஆடை, சுற்றிச் சுற்றி அடுக்காகக் காணப்படும் பாம்புப் படுக்கையும், இடுப்பில் பளபளவென்ற அணிந்த ஆடை பீதாம்பரத்தையும் நினைவுபடுத்துகிறது என்றும் கூறுகிறார்கள். இந்தக் கலை நிகழ்ச்சியை நடத்துபவர் பாடலின் ஒரு வரியைப் பாடி அபிநயம் பிடிக்க அவரின் பின்னாலிருந்து பக்க வாத்தியம்

வாசிப்பவர்கள் அந்த வரியைத் திரும்பவும் சேர்ந்து பாடுவார்கள். சாதாரணமாக ஆர்மோனியம், மத்தளம், தாளம் முதலியன பக்கவாத்தியக் கருவிகளாக பயன்படுத்தப்படுகின்றன.

பெரும்பாலும் இந்தக்கலை நிகழ்ச்சி கோவிலின் வெளிப்பிராகாரத்தில் நடக்கிறது. இந்நிகழ்ச்சியின் கதை புராணங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. அர்ஜுனன் தவமிருந்து சிவனிடம் இருந்து பாசுபதாஸ்திரம் வாங்கிய கதை மிகவும் பிரபலம்.

ஒட்டன் துள்ளலைத் தவிர இன்னும் இரண்டு வகைத் துள்ளல்களும் உண்டு. ஒன்று சீதங்கன் துள்ளல். இந்தத் துள்ளலில் தென்னங் குருத்தோலை அலங்காரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. தலையில் அணியப்படும் கிரீடமும், கைகளில் செய்யப்படும் அலங்காரமும் குருத்தோலைகளினால் ஆனது. இடுப்பில் வெளிர் நிறத்தில் சாதாரணமாக ஆடை காணப்படும். ஒரு வனதேவதை கதை சொல்வதுபோல் அமைந்துள்ள கல்யாண சௌகந்திகம் என்னும் கதை இந்தத் துள்ளல் உரையில் மிகவும் பிரபலமானது.

மூன்றாவது பிரிவு பறையன் துள்ளல். இந்தத் துள்ளலில் சொல்லப்படும் 'புலுண்டி மோக்ஷம்' என்னும் கதை மிகவும் உருக்கமானது. சிவபக்தர்களின் தீவிர பக்தியைக் காண்பிக்கிறது.

ஒரு வேடனும், அவனது மனைவியும் பரம சிவபக்தர்கள். காட்டில் வேட்டையாடி வசித்து வந்த அவர்கள் தினமும் திருநீறு அணிந்து சிவனைத் தொழாமல் வாழ்க்கையைத் தொடங்குவதில்லை. அவர்களது பக்தியைச் சோதிக்க விரும்பினார் சிவன்.

ஒரு நாள் தாங்கள் வசித்த குடிலில் நெற்றியில் அணிந்து கொள்ள திருநீறு இல்லாததைக் கண்ட வேடனின் மனைவி புலுண்டி தன்னுடைய உடலைத் தீக்கிரையாக்கி அதன் மூலம் கிடைக்கும் சாம்பலைத் தன்னுடைய கணவனான வேடனைப் பயன்படுத்திக் கொள்ளும்படி வேண்டினாள். அவனும் அதற்குச் சம்மதிக்கவே, அவள் தனது கற்பின் சக்தியினால் தீயை உண்டாக்கி, அதில் குதித்துச் சாம்பலாக மாறினாள். இதனைப் பற்றி நினைவில்லாமல் சிவ பூஜை முடிந்தபிறகு பிரசாதம் வாங்கிக்கொள்ள புலுண்டியை அழைத்தபோது, அவள் உயிர் பெற்று எழுந்து அவனிடம் வந்து பிரசாதம் வாங்கிக் கொண்டாள். முன்னைக் காட்டிலும் முகத்தில் பொலிவுடன் விளங்கினாள் அவள்.

'உடல் அழியலாம்; ஆன்மா அழியாதது' என்பதையும் விளக்கும் இந்தக் கதையில் பக்திச்சுவை அதிகமாகக் காணப்படுகிறது.

துள்ளல்களில் மிகவும் பிரபலமான கல்யாண சௌகந்திகம் தவிர, 'சந்தான கோபாலன்', 'கருட கர்வபங்கம்', 'ருக்மிணி சுயம்வரம்' போன்ற கதைகளும் நிகழ்த்தப்படுகின்றன.

இந்தத் துள்ளல் வகை கலை வடிவங்களில் நவரசங்களும் காணப்படும். வித்தியாசமான கோவில் கலை! வாய்ப்புக் கிடைக்கும்போது கண்டு சுவையுங்கள்.

**– கமலநாதன்**

# செயல்பாடுகள்

### குறிப்பு எழுதுதல்

ஒட்டன் துள்ளல் கலை வடிவம் சாக்கியார் கூத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையது என்பதனையும் அது தோன்றிய வரலாறு, அதன் சிறப்பியல்புகள் போன்றவற்றையும் குழுவாகப் பிரிந்து கலந்துரையாடிக் குறிப்பு எழுதி வகுப்பறையில் படியுங்கள்.

### விளக்கம் தருக

கலைகளின் வளர்ச்சி ஒன்றோடொன்று தொடர்புடையது என்னும் கூற்று சரியா? உங்கள் கருத்துக்களைத் தக்க சான்றுகளுடன் நிறுவுக.

### சுவரொட்டி தயார் செய்தல்

ஆடற்கலைகள் தொடர்பான நிகழ்ச்சிகளை மென்தட்டில் பதிவு செய்து ஓணத் திருவிழா நாளில் உங்கள் ஊரில் அமைந்த கலையரங்கில் காண்பிப்பதற்கான விளம்பரச் சுவரொட்டி தயார் செய்க.

### நாட்குறிப்பு எழுதுதல்

ஒட்டன் துள்ளல் கலையைக் கண்டுரசித்த நீங்கள், அது நடைபெற்ற நாள், இடம், கலைஞரின் ஒப்பனை, துள்ளல் நடைபெற்ற விதம், போன்றவற்றைச் சுவைபட நாட்குறிப்பாக எழுதுங்கள்.

### விளக்கக் குறிப்பு தயார் செய்தல்

கோடைக்கால விடுமுறையில் நடைபெறும் உங்கள் மாவட்டக் கண்காட்சியில் இடம் பெறும் ஆடற்கலைகளைப் பற்றிய விளக்கக் குறிப்பு தயார் செய்க.

### விவாதம் நடத்துதல்

ஒட்டன் துள்ளல் உண்மையான வாழ்க்கையைச் சித்திரிக்கும் கேரளக் கலைகளில் ஒன்றா? என்பதைப் பற்றி விவாதம் நடத்துங்கள். கருத்துகளைத் தொகுத்தெழுதுங்கள்.

# தடுமாறும் கரகாட்டக்கலை

சட்டென்று வந்துவிடவில்லை இந்தக் கரகாட்டம். சிலப்பதிகாரத்தில் கூட 'குடக்கூத்து' என்று கரகத்தைப் பற்றிய குறிப்பிருக்கிறது. மாதவி ஆடின பதினொரு வகை ஆடல் வகைகளில் குடக்கூத்தும் ஒன்று. கரகம் உருவானதற்கு மாரியம்மனும் ஒரு காரணம். கிராமப்புறங்களில் காலரா,சின்னம்மை, தொற்று நோய்கள் உண்டானாலோ கால்நடைகள் சற்றுச் சுணங்கினாலோ மழை வராமலிருந்தாலோ உடனே மாரியம்மனுக்கு நேர்த்திக் கடன் செலுத்துவது மரபு. கரகம் மூலமாக நேர்த்திக்கடன்; இருபத்தொருநாட்கள் விரதமிருந்து கரகம் எடுப்பார்கள். ஆற்றிலிருந்து பக்தி மயமாக பூசாரி முதலில் கரகம் எடுத்துவர, பின்னால் 'நேர்த்திக்கடன்' கரகங்கள் பின்தொடரும்.

கரகம் எடுக்கிற பூசாரிக்கு விசேஷ மரியாதை.

கரகம் விழுந்தால் அபசகுனம் என்கிற நம்பிக்கை ஒருபுறமிருந்தாலும், அப்படிக் கரகம் எடுத்து வரும்போது சுற்றிலும் வாத்தியங்கள் அதிர பூசாரியும் சற்று உடம்பை அசைத்தபடி ஆட்டம் ஆடியபடி வருவார். இந்த ஆட்டம் தான் மூலம். இதிலிருந்து தான் கரகம் ஆட்டமாகத் தொடர ஆரம்பித்தது. அது ஆட்டக்கரகம்.

ரொம்ப காலமாக இப்படிக் கரகம் ஆடினவர்கள் ஆண்களே. ஆடுகிற ஆண்களும் கரகத்தைத் தலையில் ஏந்திக் கொண்டு இரு கைகளிலும் கத்தி வைத்து பக்தியும் வீரமும் கலக்க ஆடியிருக்கிறார்கள். பெண்கள் கரகத்தை தொட்டால் தீட்டு என்று கூட கருத்து இருந்தது. பிறகு பெண்கள் புகுந்துவிட இன்றைக்கு ஆண்களைவிடக் கரகத்தை அவர்களே கவர்ச்சிகரமாக ஆக்கிரமித்திருக்கிறார்கள். இப்படிக் கரகத்திற்கு 'மாரியம்மன்' மூலம் இருப்பதால் இன்றைக்கும் பாரம்பரியக் கரகாட்டக் கலைஞர்கள் அம்மனை வழிபட்ட பின்னரே ஆட ஆரம்பிக்கிறார்கள். தமிழ் நாட்டில் கரகம் இப்படித் துவங்கின மாதிரி கேரளா, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களிலும் வெவ்வேறு அம்மன்களுக்கு, 'கும்பாட்டம்' என்று விதவிதமான பெயர்களில் கரகம் எடுப்பது நடக்கிறது. இருந்தும் கரகாட்டம் முழுக்கத் தென்னிந்திய ஆட்டம் தான்.

மேலே உள்ள விஷயங்களை விலாவாரியாக நம்மிடம் சொல்லிக் கொண்டு போனார் கரகம் பற்றித் தமிழ் நாட்டளவில் ஆய்வு செய்திருக்கும் தஞ்சைப்பல்கலைக்கழக நாடகத்துறைப் பேராசிரியரான டாக்டர் முருகேசன்.

கரகத்திலும் வளர்ச்சி. முதலில் மண்குடம், பிறகு வெண்கலம், இப்போது எவர்சில்வரில் கூட கரகக்குடங்கள் வந்துவிட்டன. மேலே நெட்டியில் செய்யப்பட்ட வர்ணங்கள் தீட்டிய கிளியைச் செருகிவிட, இதுதான் தற்போதைய கரகம். முதலில் ஆட்டக்கரகம் ஆடியபோது பிரபலமானவை நாடகத்தில் உருவான சில மெட்டுக்கள். ஆரவல்லி, கள்ளபார்ட் நடராஜன், கட்டபொம்மு இந்த மாதிரி மெட்டுகளை நையாண்டி

மேளக்காரர்கள் வாசிக்க, அதற்கேற்றபடி அடிகள் வைத்து ஆடுவார்கள். திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம் என்று விதவிதமான அடவுகள் ஆரம்பக்கால கரகாட்டத்தில், பரதத்திற்குரிய ஒழுங்குகள் மாதிரி இது கரகாட்ட விதி. பாரம்பரியமான இந்தக் கரகாட்ட நெறியைக் கற்றுக் கொடுக்கும் ஆண் ஆசிரியர்கள் மதுரை, தஞ்சாவூர்ப் பகுதிகளில் இன்னும் இருக்கிறார்கள். ஆரம்பத்தில் கரகம் ஆட வந்த பெண்களும் கொசுவம் வைத்த மஞ்சள் சேலையுடன் ஒழுங்கை அனுசரித்துத்தான் ஆடினார்கள். பிறகு கரகத்தில் மாற்றம் வந்தது எப்படி?

இதன் பார்வையாளர்களில் பெரும்பாலானோர் கிராமப்புறம் சார்ந்தவர்களே. அறுபதுகளுக்குப் பிறகு சினிமாவின் தாக்கம் கிராமப்புறங்களில் வந்த பிறகு, பாரம்பரியமான கரகம் போதுமானதாக இருக்கவில்லை ஜனங்களுக்கு. கரகம் இதனாலேயே மாறிப்போனது.



துவக்கத்தில் பாரம்பரியமான கலையாகக் கரகத்தை அடவுகளுடன், நிதானமான இசைப் போக்குடன் ஆடியவர்கள், பிறகு சர்க்கஸ் வித்தைகளின் கூறுகளை இணைத்துக் கொண் டார்கள்.

சினிமா பாணியில் கவர்ச்சிகரமான உடையணிந்து கொண்டார்கள். தமிழ்நாடு முழுக்கக் கரகாட்டக் கலைஞர்கள் அதிகமிருந் தாலும், தஞ்சையிலும், மதுரையிலும் அதிகம். அதிலும் ஆண் கரகாட்டக் கலைஞர்கள் அதிகமிருப்பது மதுரையில்மட்டுமே.

மதுரையில் ஆரம்பத்தில் கலைமாமணி விருது பெற்ற கரகாட்ட ஆசிரியரான அங் குசாமிப்பிள்ளை பல கலைஞர்களை உரு வாக்கியவர். அந்தக் காலத்தில் சர்க்கஸைப் பார்த்து கரகாட்டத்துடன் சர்க்கஸ் வித்தைக் கூறுகளை இணைத்து அதைச் சுவாரஸ்ய மான தாக்கியவர். பிறகு வந்த கரகாட்டக் கலைஞர் களான ஓம் பெரியசாமி, சாரங்கபாணி, லெட்சுமி, வேலு என்று பலருக்கும் இவர்தான் குரு. பாரம்பரியக் கரகாட்டத்தை இன்னும் தக்கவைத்துக் கொண்டிருக்கும் கலைஞர்கள் மதுரையில் இருக்கிறார்கள்.

கரகாட்டத்தில் சிறப்பான இடம் வகித்த ஓம் பெரியசாமி வெளிநாடுகளுக் கெல்லாம் கரகாட்டக்கலையை அறிமுகப்படுத்தியவர். ‘லீலாவதி நடனப்பள்ளி’ என்று கரகத்தைக்

கற்றுக் கொடுக்கத் தனிப் பள்ளியைத் துவக்கி, வெளிநாட்டு மாணவர்களுக்கும் கரகம் கற்றுத் தந்தவர். இவர் 84 இல் மறைய அவரது கலையைத் தொடர்கிறார்கள் இவரது மகன்களான மதுரைவீரனும், சேனாதிபதியும். பதினெட்டு பேர் அடங்கின குழுவுடன் 92ல் குவைத் நாட்டிற்குப் போய் கரகம் ஆடித் திரும்பியிருக்கிறார்கள். ஏழெட்டுப் பானைகளைத் தலையில் செங்குத்தாக அடுக்கி ஆடுகிற 'விளக்குக் கரகம்' இவர்களது குழுவின் தனித்துவத்தைக் காட்டுகிற ஒன்று.

"பாரம்பரியமான கரகக் கலையை இன்று ஆரம்பத்தில் கொஞ்ச நேரம் மட்டுமே ஆடுகிறோம். அதன் பிறகு சர்க்கஸ் வித்தைகளுடன் இணைந்த கலைதான் பண்ணுகிறோம். பாரம்பரியக் கலையை முழுக்க எங்களால் செய்ய முடியுமென்றாலும், அதை இன்று ரசிப்பவர்கள் குறைவு. ஆனால் வெளிநாட்டிலிருந்து கரகம் பயில வரும் மாணவர்கள் நமது பாரம்பரியமான கலையைத்தான் விரும்பிக் கற்றுக் கொண்டு போகிறார்கள்".

"அந்த அளவுக்கு அதற்கு மதிப்பிருக்கிறது. அரசு விழாக்களா? கிராமத் திருவிழாவா? என்று இடம் பார்த்து அங்குள்ள ரசனைக்கேற்றபடி ஆட்டம் ஆடுவோம். எங்களது தகப்பனார் ஓம் பெரியசாமி காலத்தில் இங்கு இயங்கின கரகாட்டப் பயிற்சிப் பள்ளியைப் பிறகு மூடிவிட்டோம்". அதை நடத்த யாராவது உதவி செய்தால் நம் பாரம்பரியக் கலையைப் பலருக்கும் கொண்டு போக முடியும் என்கிறார்கள் மதுரைவீரனும், சேனாதிபதியும்.

இந்த வருஷம் 'கலைமாமணி' விருது பெறும் கலைஞரான வீ.வேலு பாரம்பரியமான கரகாட்டக் கலைஞர், பனிரெண்டு வயதிலிருந்தே நடனம்.

"முதலில் பத்துப் பதினைந்து நிமிடங்களுக்கு மட்டுமே பழைய ஆட்டம். பிறகு டப்பா ஆட்டம் தான்" என்கிற இவர், வயது ஐம்பத்தைந்தானாலும் கரகத்தில் அநாயாசமான வேகம் காட்டுகிறார்.

"ஆண் கலைஞர்கள் பலர் பிரபலமானது இங்கு மட்டுமே. இன்னும் எங்களுக்குக் கலையைக் கற்றுத்தந்த ஆசிரியரையும் சபையையும், மேளக்காரர்களையும், மண்ணையும் வணங்கிவிட்டுத் தான் ஆட ஆரம்பிப்போம். எந்தவிதத்திலும் மோசமாக நாங்கள் ஆடுவதில்லை. அழிந்துவருகிற இந்தக் கரகாட்டக் கலையைக் கற்றுக் கொடுக்க இடம் கேட்டு முதல்வருக்கு விண்ணப்பித்திருக்கிறேன்" என்கிறார் வேலு.

இது தவிர, நன்கு படித்த இளைஞர்களும் கரகத்தில் இறங்கியிருக்கின்றனர். "எந்த அசிங்கமும் இல்லாமல் ஆடுவதற்கும் மதிப்பு இருந்துகொண்டுதானிருக்கிறது. வெளிநாட்டவர்கள் இந்தக் கலையை ஆச்சரியத்துடன் பார்க்கிறார்கள். இப்போ எழுநூறு நிகழ்ச்சிகளை நடத்திவிட்டேன். இருந்தும் கரகத்தில் பெண்கள் ஆடுவதையே பலரும் விரும்பிக் கேட்கிறார்கள்" என்கிறார் சுரேஷ்,

தஞ்சையில் பஸ் ஸ்டாண்டையொட்டியும், வடக்கு வாசல் பகுதியிலும் நூற்றுக்கணக்கான கரகாட்டக்காரர்கள். பெரும்பாலும் பெண்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர், கள்ளர் இனத்தவர், மராட்டியர் இவர்களுடன் கிறிஸ்தவ, முஸ்லீம் மதத்தை சேர்ந்த பெண்களும் கரகம் ஆடுகிறார்கள் என்பது இங்கு விசேஷம்.

இருபத்தைந்து வருடமாகக் கரகம் ஆடும் எஸ்தர் ராணி, கரகம் வைத்தபடியே, கத்தி சுழற்றுகிறார்; கம்பு, பார்விளையாட்டு விளையாடுகிறார்; கண்ணை மூடி வாழைக்காய் வெட்டுகிறார். இருந்தும் போதுமான வாய்ப்புகளில்லை. "தொழில் தெரியாதவங்களுக்குத்தான் மரியாதை. ஒரு நாளைக்கு எட்டுமணி நேரம் வரை தொடர்ந்து ஆடக்கூடிய எங்க தொழில் கிராமத்துப் பண்டிகைகளை முழுக்க நம்பியிருக்கு" என்கிறார்.

பாரம்பரிய கரகம் ஆடுவதில் இங்குள்ள தேன்மொழிக்குத் தனிப்பெயர். தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகமும், தென் மண்டலக் கலைப் பண்பாட்டு மையமும் ஏற்பாடு செய்யும் விழாக்களுக்குச் சேலையணிந்து கரகமாடுகிறார். "நல்ல பார்வையாளர்கள் முன்னால் ஆடுவது பிடித்திருக்கிறது. என்னதான் தொழில் வித்தைகளை நாங்கள் கற்றிருந்தாலும் பலர் அதை ரசிப்பதில்லை" என்கிறார் தேன்மொழி. இன்னும் இதைப்போல தென்காசிப் பகுதியில் முத்து லெட்சுமி, பொன்னமராவதி, கல்யாணி, தஞ்சை ரத்தினம் என்று பல பெண்கள் கரகத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தஞ்சைக்கு அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த வயதான கரகக் கலைஞரான பெரியசாமி உலக்கையைத் தலையில் வைத்து அதன் மீது கரகம் நிறுத்தி ஆடுவது கரகக் கலை ஆச்சரியம்.

கரகக்கலையில் இன்னொரு விஷயம் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள புரோக்கர்கள், கலைஞர்கள் நேரடியாகப் பேசி அட்வான்ஸ் வாங்குவதைவிட, புரோக்கர்கள் தான் வாங்கிக் கலைஞர்களை அனுப்புகிறார்கள். மதுரை போன்ற குறிப்பிட்ட சில இடங்களில் பெண் ஆட்டக்கலைஞர்களுக்கு அட்வான்ஸாக மூவாயிரத்திலிருந்து ஐயாயிரம் வரை கொடுத்து விடுவார்கள் புரோக்கர்கள். அதன் பிறகு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து பணம் பெற்றுக் கொள்வது முழுக்க புரோக்கர்கள். ஆடுகிறவர்களுக்குக் கிடைப்பது மிகச் சொற்பப்பணமே. இப்படியே ஏறத்தாழ அடிமைகள் மாதிரி அவர்கள் ஆகிவிடுவது பொருளாதாரத்தினால் உருவான ஒரு அவலம்.

ஒரு பக்கம் கரகாட்டக் கலை முன்பிருந்த மதிப்புகளை இழந்து கவர்ச்சியானதாகவும், சில மோசமான அசைவுகளைக் காட்டக் கூடியதாகவும் உருமாறி விட்டிருக்கிறது. இன்னொரு பக்கம் 'சர்க்கஸு'க்கான வித்தைக் கூறுகளுடன் இணைந்து தன்னை நிலை நிறுத்திக் கொள்ளத் திணறிக் கொண்டிருக்கிறது.

– மணா

# செயல்பாடுகள்

**குறிப்பு எழுதுதல்**

கரகம் – ஆட்டக்கலையாக உருமாறி வளர்ச்சியடைந்த நிலையினைப் பற்றி குறிப்பு வரைக.

**கருத்து வெளியிடல்**

கரகாட்டக்கலை அழிவுப்பாதையில் செல்கிறதென நீங்கள் கருதுகிறீர்களா? உங்கள் கருத்தை எழுதுங்கள்.

**கருத்தரங்கக் கட்டுரை எழுதுதல்**

'ஆட்டக்கலையில் கரகாட்டம்' எனும் தலைப்பில், உங்கள் மாவட்டக் கலையரங்கில் நிகழும் நாட்டுப்புற மாநாட்டு கருத்தரங்கில் பங்கேற்க நீவிர் தயாரிக்கும் கருத்தரங்குக் கட்டுரை எவ்வாறு அமையும்?

**படத்தொகுப்பு தயார் செய்தல்**

தமிழக நாட்டுப்புறக் கலைகளின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு தயார் செய்க.

**நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சி நடத்துதல்**

பொங்கல் திருநாளில் உங்கள் மாவட்டக் கலையரங்கில் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியைப் பொதுமக்கள் கவனத்தில் கொண்டு வருவதற்காகப் **பத்திரிகை விளம்பரம்** ஒன்று தயார் செய்க.

# இறகற்றுப் போன மயில்கள்

மேடைக்கு முன்னால், முக்கியப் பிரமுகர்கள், அவர்களின் மனைவிமார்கள், பிள்ளைகள், அதிகாரிகள், பெரிய மனிதர்கள்.

மேடைக்கு கீழே நையாண்டி மேளம், உறுமி, இரட்டைக்கொட்டு, நாயனம்.

கால்களில் சலங்கைக் கட்டு. பொய்க்காலுக்குச் சலங்கையுண்டோ?

அது பொய்க்கால் குதிரை. பொய்க்காலிலும் கலை பிறக்கும் என்பதை அந்தக் கிராமியக்கலைஞன் நிரூபிக்கிறான்.

பொய்க்கால் குதிரைக்கு இணையாக மயில் ஆடுகிறது. நையாண்டி மேள வாசிப்புக்குத் தக்க மாதிரி காலடி வைப்பு நடக்கிறது. மேடையெங்கும் மின்னல் வேகத்தில் சுற்றிப் பறக்கிறது.

மின்னல் வேகப்பறப்புக்கு ஈடுகொடுக்க முடியாமல் மேளக்காரன் திணறிப்போனான்.

கூட்டத்துக்கு உற்சாகமாய் இருந்தது. கிறுகிறுத்துப் போய் நின்றார்கள். பக்கத்திலிருந்த ஓவியர் சந்தானம் சொல்கிறார்.

“அவன் கால்களைப் பாருங்கள்”

ஓவிய நண்பர் சந்தானம் கலையை மட்டுமே காண்பவரில்லை. வாழ்க்கையையும் அவதானிப்பவர்.

அவர் சொன்னது, நிச்சயம் காற்றுப் போன்ற கால்களாக இருக்க முடியாது.

மயிலாட்டக்காரரின் கால்களில் வெடிப்புகள்.

விறுவோடிய வெடிப்புகளில் வாழ்க்கை தெரிந்தது.

அவன் கைகளைக் கவனியுங்கள்

வேலை செய்து காய்ப்பேறிய கைகள்; கரடு முரடாய்த் தெரிந்த உழைக்கும் கரங்கள். ஒரு கலைஞனின் மென்மையான கைகள் அல்ல.

மற்றக் கலைஞர்களுக்கு இடம் விட்டுக் களைப்பில் ஒரு மூலையில் அவன் இளைப்பாறிய போது சந்தானம் சொன்னார்:

அவனுடைய மயில் ஆடையைப் பார்த்தீர்களா? நன்றாகப் பாருங்கள். தன் மகளின் பாவாடையை ஒட்டுப் போட்டுத் தைத்து, ஆடையாக மாற்றியிருக்கிறான்.

கிழிந்த பாவாடை,

வாழ்வில் களைத்துப் போன அந்த மயிலாடி சொன்னார்.

“எங்க அய்யா(அப்பா) அப்பவே சொன்னார்;

உனக்கு இந்தத் தொழில் வேண்டாம். என் தலையோடு போகட்டும். நீ பள்ளிக்கூடம் போ. பிழைக்கிற வழியைப் பார்னு”

தஞ்சாவூர் சொந்த ஊர்., மராட்டிய பரம்பரை தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட போது தமிழகத்திற்கு வந்தவர்கள்.

மயிலாட்ட உடுப்பு அவன் தகப்பனின் தலையோடு போகவில்லை. தாத்தாவுக்குத் தாத்தா காலத்தில் ஆரம்பித்து இவன் தலையில் முடிந்திருப்பதாகச் சொன்னான்.

“இந்தக் காலத்தில் யார் மயிலாட்டம் பார்க்கிறாங்க? அந்தக் காலத்தில் ஊர்ல ஒரு விசேஷம்னா மயிலாட்டம், பொய்க்கால் குதிரைன்னு தேடுவாங்க. இப்ப எல்லாம் நாகரிகமாகப் போச்சு, ரேடியோ, சினிமா, டான்ஸ், வீடியோன்னு போயிடறாங்க”.

விஞ்ஞான வடிவத்தில் வந்திறங்கிய இந்தப்பாறைகள், அப்படியே உருண்டு கிராமியக் கலைகளை எழுந்திருக்க முடியாமல் அழுத்திவிட்டன. சுமையின் கனம் தாங்காமல் வாழ்வின் கழுத்து ‘குன்னி’ப்போன ‘கலைஞன் அவன்’.

“வேறெங்கேயும் போவீங்களா? இப்படியான கலாச்சார விழா வேற மாநிலங்களிலும் நடைபெறுகிறதா?”

டெல்லி, பம்பாய், ஹைதராபாத் எல்லாம் கூட்டிட்டுப் போவாங்க. எங்களிலேயே வேற வேற பார்ட்டி இருக்கில்ல; சில நேரங்கள்லே மற்றவங்க போவாங்க

“ஒரு நாளைக்கு எவ்வளவு கொடுப்பாங்க?”

“நிகழ்ச்சி இருந்தா 50 ரூபாய்; இல்லாத நாள்ல 25 ரூபாய்”

வேற்று மாநிலங்களில் தங்கி இருக்கிற போது இந்த 25 ரூபாயில், செலவு செய்து, மீதி கொண்டு வரவேண்டும்.

கிராமியக்கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய இடைத்தரகர்கள் உருவாகி விட்டார்கள். இந்த மயிலாட்டக்காரன் நேரடியாக நிகழ்ச்சி நடத்துபவர்களைத் தொடமுடியாது. இவர்கள் வழியாகத்தான் கலை மக்களை அடையவும் தன் வாழ்க்கையைத் தடவிக் கொடுக்கவும் வேண்டும். இடையில் பலித்த மட்டும் லாபம் என்று கணக்குப் போடும் இவர்களை நயந்துதான் கலைஞன் ஆட்டம் நடக்க வேண்டும். நயந்து போகிற கலைஞர்கள் தான் வருடம் முழுதும் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்கெடுக்கமுடியும்.

ஊருவிட்டு ஊர்; நாடு விட்டு நாடு போகவும் வேறு மாநிலக் கலைஞர்கள் தங்களுக்கிடையே கலந்து பரிமாறிக் கொள்ளவும் நெருங்கி வரவும் இந்தக் கலைவிழாக்கள் பயன்படுமாம்.

ஒவ்வொரு மாநிலக் கலைஞர்களும் பரிமாறிக் கொள்வது எதை? தங்களுடன் உடன் பிறந்து தங்களுடனேயே வாழும் வறுமையையா? அல்லது தங்களை அடி உரமாய் வைத்து நிகழ்ச்சியை நடத்துபவர்களும் இடைத் தரகர்களும் நடத்தும் மோசடியையா?

பக்கத்தில் குட்டி மயில் கிடக்கிறது. பசியால் துவண்டு, ஆடிய களைப்பால் சோர்ந்து சுணங்கிப் போய்க் கிடக்கிறது.

“எம் பையன். அவனுக்கு இந்த உடுப்பு வேண்டாம். அவன் பள்ளிக்கூடம் போறான். ஆனா படிப்பு வரலெ”.

படிப்பு வராது. இது மாதிரி குடும்பங்களில் வாழ்க்கை படிப்பை விடப் பெரிது.

அவனுக்குப் புளித்துப் போய்விட்டது. இந்த உடுப்பை உடலிலிருந்தும், ஆட்டத்தைக் கால்களிலிருந்தும் கழற்றி எறிந்து விட்டுப் போய்விட நினைக்கிறான்.

ஆனால் வாழ்க்கை அவனைவிடப்பெரிது.

மனிதனின் வசம் வாழ்க்கை இல்லை. பதிலாய், வாழ்க்கையின் கைவசம் மனிதன் இருக்கிறான் என்பதை அவன் எனக்குப் புரிய வைக்கிறான்.

அந்த மயிலுக்கு மேலேயும் கீழேயும், முன்புறமும், பின்புறமும் கார்காலம்.

ஆனால் மயிலுக்குள் கார்காலம் தென்படவில்லை. ஒரு சொட்டுமழை காணாமலேயே, அதன் வாழ்க்கை உலர்ந்து போகிறது.

தனக்குப் பிரியமானவர்கள் வந்தால், விரிவது மனித முகம்; பிரியப்பட்ட வாழ்வு தென்படாமலே வெம்பிப் போகிறது மயிலின் முகம்.

## செயல்பாடுகள்

**கருத்து வெளியிடுதல்**

இந்தக் காலத்தில் யார் மயிலாட்டம் பார்க்கிறாங்க? அந்தக் காலத்தில் ஊர்லே ஒரு விசேஷம்னா மயிலாட்டம், பொய்க்கால் குதிரைன்னு தேடுவாங்க. இப்ப எல்லாம் நாகரிகமாப்போச்சு ரேடியோ, சினிமா, டான்ஸ், வீடியோன்னு போயிடறாங்க.

– இப்பகுதி உணர்த்தும் கருத்தை விளக்குக. இது போன்று நலிந்து வரும் வேறுசில நாட்டுப்புறக் கலைகளைக் குறிப்பிடுக.

**வழக்காடு மன்றம் நிகழ்த்துதல்**

உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழாவில் ‘நாட்டுப்புறக்கலைகள் புறக்கணிக்கப்படுகின்றன’ எனும் தலைப்பில் வழக்காடு மன்றம் நிகழ்த்துங்கள்.

**உரையாடல் தயாரித்தல்**

மயிலாட்டக்காரருடன் உரையாடுவது போன்று (மாணவர்– நாட்டுப்புறக்கலைஞர்) ஒரு கற்பனைஉரையாடல் தயாரிக்க.

**கட்டுரை எழுதுதல்**

‘நாட்டுப்புறக் கலைகள் பண்பாட்டுக் கூறுகளின் பிரதிபலிப்பு’ எனும் தலைப்பில் கட்டுரை வரைக.

**துண்டுப் பிரசுரம் எழுதுதல்**

தமிழர் திருநாளை முன்னிட்டு உங்கள் மாவட்டக் கலையரங்கில் ‘மயிலாட்டப்புகழ் கற்பகம்’ அவர்கள் நிகழ்த்தும் மயிலாட்டக் கலை நிகழ்ச்சி நிகழ்த்துவதற்கான செய்தியைத் துண்டுப் பிரசுரமாக எழுதுக.

**செயல் திட்டம் தயாரித்தல்**

தமிழக / கேரளக்கலைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து பகுப்பாய்வு செய்து தொகுத்துத் தமிழக – கேரளக்கலைகள் – அன்றும் இன்றும் எனும் தலைப்பில் செயல்திட்டமாக வெளியிடுங்கள்.

**ஒலிக் குறிப்புச் சொற்கள்**

கீழ் வரும் சொற்களைக் கவனியுங்கள். ஒருமுறை வந்த சொல்லே மீண்டும் வந்தாலும் அச்சொல் பொருளை உணர்த்துவது இல்லை. ஒலிக் குறிப்பையே உணர்த்துகிறது. மாதிரியில் காட்டியது போன்ற தொடர்களை எழுதுங்கள்.

- பளிச் பளிச்
- லொக் லொக்
- 
- 
- 

**இப்படியும் எழுதலாமே!**

**மாதிரி**: ♦ நாட்டுப்புறக் கலைஞர் கரகாட்டம் ஆடினார்.

கரகாட்டம் நாட்டுப்புறக் கலைஞரால் ஆடப்பட்டது.

- தெருக்கூத்தைக் கட்டியங்காரன் நடத்தினான்.
- குஞ்சன் நம்பியார் ஓட்டன் துள்ளலைத் தோற்றுவித்தார்.

3

# இமயத்தின் உச்சியில்

பஞ்சுடைப்போம் பஞ்சுடைப்போம்
நெஞ்சாரப் பஞ்சுடைப்போம்
பஞ்ச மெல்லாம் தீரட்டுன்னு
பகலெல்லாம் பஞ்சுடைப்போம்

காடுவெட்டி கல்பொறுக்கி
கம்பு சோளம் தினைவிதச்சு
மேடு வெட்டி முள் பொறுக்கி
முத்துச் சோளம் தினைவிதச்சு

ஒரு தட்டு ஏலேலோ மண்ணெடுத்து ஐலசா
நான் போட்ட ஏலேலோ ரயிலுரோட்டு ஐலசா

“உப்பு புடிச்சு வண்டி லேலங்கிடி லேலோ
உடுமலைப் பேட்டை போறவண்டி லேலங்கிடிலேலோ”

**– நாட்டுப்புறப்பாடல்கள்**

- மேற்குறிப்பிட்டுள்ள கவிதை வரிகளைப் படித்த நீங்கள் அவற்றின் மையப் பொருளாக எதனைக் கூறுவீர்கள்?
- இக்கவிதை வரிகளில் வரும் தொழில்கள் என்னென்ன? குறிப்பு எழுதுக.

# உழைப்பின் உன்னதம்

**காட்சி 1**

**இடம் - சந்திரனின் வீடு**

**பங்கு பெறுவோர் - சந்திரன், பங்கஜம்**

( சந்திரனின் அம்மா பங்கஜம், பையில் இருந்த மளிகைப் பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறாள்).

பங்கஜம் : சந்திரா........ டேய் சந்திரா!. அங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கே?

சந்திரன் : இதோ வர்றேம்மா... படிச்சுக்கிட்டு இருக்கேன். என்ன செய்யணும்னு சொல்லுங்க?

பங்கஜம் : இந்தாப்பா.... இதுல மிளகு, சீரகம் இருக்கு. உங்கூடப் படிக்கிறானே... முருகேசன், அவங்க அம்மா வாங்கிட்டு வரச்சொன்னாங்க. கொண்டுபோயி கொடுத்துட்டு வா!

சந்திரன் (உணர்ச்சி வசப்பட்டு முகத்தைச் சுளித்துக் கொண்டு)

: என்னது! அவங்க வீட்டுக்கா---! நான் போக மாட்டேன். வாசல்ல கன்னுக்குட்டி, மாடு, ஆடுனு கட்டிப் போட்டிருப்பாங்க. அசிங்கமா இருக்கும். அதுவும் போக, அவங்க அப்பா ஊர்ல உள்ள வங்க அத்தனை பேர்ட்டுல உள்ள மாடுகள்லயும் பால்கறப்பவர். இது அவரு வர்றநேரம். ஒரே நாத்தம். அவங்க வீட்டுக்குள்ள நுழைய முடியாது. வேணும்னா நீங்க போயிட்டு வாங்க.

பங்கஜம் : ஏண்டா.... அது அவங்க குலத்தொழில், அதைப் போயி கேவல மாப் பேசாதேடா... அவங்க பால் கறக்கலைன்னா... நீ எப்படிடா பால் குடிக்க முடியும்? யோசிச்சுப்பாரு...!.

சந்திரன் : (ஏளனத்துடன்) அதையெல்லாம் நான் ஏன் யோசிக்கணும்? எங்க அப்பாகிட்ட நெறைய பணம் இருக்கு.

பங்கஜம் : என்னடா... பணம் இருக்குணுக்கிட்டு. நம்ம குலத்தொழில்.... கொத்தனார் வேலை தெரியுமா உனக்கு?

சந்திரன் : எனக்குத் தெரியாது அம்மா...! ஆளை வீடு...! (கோபத்துடன் வெளியே செல்கிறான்)

*(திரை)*

## காட்சி 2

**இடம் - மாமா சுந்தரத்தின் வீடு**

**பங்கு பெறுவோர் - மூர்த்தி, சந்திரன்., சுந்தரம், கோமதி, மோகன்.**

(சந்திரன் உள்ளே வருகிறான். அவன் மாமா சுந்தரம் உட்கார்ந்திருக்கிறார்).

சந்திரன் : மாமா...! மாமா...!

சுந்தரம் : (தலைநிமிர்ந்து வியப்புடன்) யாரு...? அடடே...! என் மருமகனே! வாய்யா சந்திரா! வீட்டுல அம்மா எல்லாரும் நல்லா இருக்காங்களா?

சந்திரன் : நல்லா இருக்காங்க மாமா.

சுந்தரம் : என்னய்யா சந்திரன். இத்தனை வருஷத்துல உனக்கு மாமா வீட்டுக்கு வரணும்னு தோணலையே... இப்பவாவது வந்தியே... உட்காருப்பா........! இப்ப உங்க அத்தை வந்திருவாங்க.

சந்திரன் : ஆமா ... அத்தை எங்கே போயிருக்காங்க மாமா... (சுற்று முற்றும் பார்க்கிறான்)

சுந்தரம் : மருமகன் நீ வந்திடுவேனு சமையல் பண்ணிக்கிட்டு இருக்காங்க. கோமதி...! இங்கே யாரு வந்திருக்காங்கன்னு வந்து பாரு. உன் மருமகன் வந்திருக் காரு......!

கோமதி : (வந்து கொண்டே) அடே... வா மருமகனே! நல்லா படிக்கிறியா?

சந்திரன் : நல்லா படிக்கிறேன் அத்தே....!

கோமதி : சமையல் முடிஞ்சிருச்சு. மூர்த்தியும் இப்ப வந்திடுவான். கொஞ்ச நேரம் உங்க மாமாகிட்டப் பேசிக்கிட்டு இரு. பசியோட வந்திருப்பாப்பிலே.....!

(கோமதி உள்ளே போகிறாள்)

சந்திரன் : ஆமா... நானும் வந்தவுடனே கேட்கணும்னு நெனச்சேன். மூர்த்திய எங்கே மாமா காணோம்?.

சுந்தரம் : அவன்... வேலைக்குப் போயிருக்கான்.

சந்திரன் : (ஆச்சரியத்துடன்) என்னது வேலைக்கா....! என்ன வேலைக்கு மாமா?

சுந்தரம் : என்ன வேலைக்கு.... நம்ம வேலைக்குத் தான். எனக்கு இன் னைக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்ல. நீ வருவேனு உங்க அம்மா லெட்டர் எழுதி இருந்தாங்க. அதான் உங்க அத்தையும் இன்னைக்கு வேலைக்குப்

போகல.  நாங்களும்  வேலைக்குப் போயிருந்தா இனிமேல் தான் வீட்டுக்கு வருவோம்.

கோமதி : சந்திரன்! வாப்பா சாப்பிடலாம்!.

சந்திரன் : இருக்கட்டுங்கத்தே...! மூர்த்தி வரட்டும். (அப்போது சரியாக மூர்த்தியும் உள்ளே வருகிறான்)

மூர்த்தி : யாரு...! டேய் சந்திரன், நீயா...! எப்ப வந்தே...? (மூர்த்தி சித்தாள் வேலைக்குப் போயிருந்ததால், தலையும், உடலும் ஒரே சிமெண்ட் மயமாக இருந்ததால் அடையாளம் தெரியாமல் விழிக்கிறான் சந்திரன்)

என்னடா சந்திரா முழிக்கிறே? நான் தான் மூர்த்தி...!

சந்திரன் : (அவனைப் பார்த்து சற்று அருவருப்பாக ஒதுங்குகிறான்). ஓ... மூர்த்தியா! இப்பத்தான் வந்தியா? வே... வேலை முடிஞ்சிருச்சா...?

மூர்த்தி : டே.... எனக்கு உன்னய நல்லாத் தெரியும். கொஞ்சம் இரு, குளிச்சிட்டு வந்துடறேன். (உள்ளே போகிறான்)

சுந்தரம் : சரி, நீ வா சந்திரன். நாம சாப்பிடலாம். புள்ள நீ பசியோட வந்தி ருப்பே... மூர்த்தி இப்ப குளிச்சிட்டு வந்திடுவான். நீ வா...!
(சாப்பிட்டு முடித்ததும் மூர்த்தி, சந்திரன் இருவரும் வெளியே திண்ணையில் வந்து உட்காருகின்றனர்)

(மூர்த்தியின் நண்பன் மோகன் வருகிறான்)

மூர்த்தி : டேய் சந்திரன் அதோ பாருடா, நான் சொன்னேன்ல என் நண்பன் மோகன்... வர்றான் பாரு.

மோகன் : ஹாய் மூர்த்தி.....! வேலை முடிச்சுட்டு வந்துட்டியா?

மூர்த்தி : இப்பத்தாண்டா வந்தேன். நான் சொன்னேன்ல ஊர்ல இருக்குற எங்க அத்தை மகன் சந்திரன் இவன்தான்.

சந்திரன் : ஹாய் மோகன்.....!

மோகன் : ஹலோ... என் மூர்த்திக்கு நீ ஃப்ரண்ட் மாதிரினா எனக்கும் நீ ஃப்ரண்ட் தான்.

(இருவரும் கை குலுக்கிக் கொள்கின்றனர்)

*(திரை)*

## காட்சி 3

**இடம் - மோகன் வீடு**

**பங்கு பெறுவோர் - மூர்த்தி, மோகன், சந்திரன்,**

(மூவரும் மோகன் வீட்டு மொட்டை மாடியில் உட்கார்ந்திருக்கின்றனர்)

சந்திரன் : ஏண்டா மோகன்! (மூர்த்தியைச் சுட்டிக்காட்டி) இவங்க வீட்டுக்கு எப்படிடா உன்னால போகமுடியுது?

மோகன் : ஏன் அவங்க வீட்டுக்கு என்ன குறை?. எண்ணங்களிலே எல்லாருமே உயர்ந்தவங்க. அடுத்தவங்க மனசை புண்படுத்த மாட்டாங்க. இதை விட எனக்கு அங்கே போறதுக்கு காரணம் வேறே என்ன வேணும்?.

மூர்த்தி : சந்திரன் உழைப்பாளிகளோட குடும்பத்தை நீ பார்த்த தில் லேன்னு நினைக்கிறேன். நீ மொதல்ல அவங்க தொழிலை வந்து பாரு,

சந்திரன் : எந்தத் தொழிலைப் பார்க்கணும்னு சொல்ற?

மூர்த்தி : எங்க ஊர்ல நெசவுத்தொழில் இருக்கு. விவசாயத்தொழில், மண்பாண்டத்தொழில் அது மாதிரி பல தொழில்கள் இருக்கு.

சந்திரன் : நெல், காய், கனிகள் பயிர் செய்ற இடத்துக்குப் போகணும். அதையெல்லாம் பார்க்கணும்னு எனக்கு ரொம்ப நாள் ஆசை. ஆனா........... அங்கே வேலை பாக்குறவங்களப் பார்த்தா எனக்குப் பிடிக்காது. அதான் நான் எங்கேயும் போகமாட்டேன்.

மோகன் : (தனியாக சந்திரனிடம் ) சந்திரா.......! ஆசைப்பட்டே இல்லையா ......? நீ மட்டும் அங்கே போகப் போறீயா.........? நாங்களும் வர்றோமே.........!

*(திரை)*

## காட்சி 4

**இடம் - வயல்வெளி**

**பங்கு பெறுவோர் - மூர்த்தி. மோகன். சந்திரன், பெரியவர்.**

(காட்சியமைப்பு மூவரும் பேசிக்கொண்டே நெற்கதிர்கள் விளைந்த பகுதிக்கு வருகின்றனர்).

சந்திரன் : இங்கே பாரு......! பச்சைப்பசேலென்று பாக்குறதக்கே எத்தனை அழகாக இருக்கு!

மூர்த்தி : இத்தனை அழகா! இந்த வயல்வெளி தோன்றுவதற்குக் காரணம் என்னனு நெனக்கிறே?.

சந்திரன் : அந்தக் காரணமெல்லாம் நமக்கெதுக்குடா? எனக்கு இதைக் கொஞ்சம் பிடுங்கிப் பார்க்கணும்னு ஆசையா இருக்கு......

(கெஞ்சுதல்)

மூர்த்தி : தாராளமாய் பிடுங்கிக்கோ ..............! (பிடுங்கிய நெல்லைக் கசக்கு கிறான்)

மோகன் : பார்த்தாயா, சந்திரா! இந்த அரிசி எப்படி வருதுன்னு.... அதோ பார் இந்த விவசாயிகளாலத் தான்..........!

(அவன் சுட்டிக் காட்டிய பக்கம் விவசாயிகள் நெற்பயிரை அறுவடை செய்து கொண்டிருந்தனர்)

சந்திரன் : (அலட்சியமாக ) ஏண்டா அவங்களால மட்டும் தான் முடியுமா என்ன ? யார் வேண்டுமானாலும் அறுக்கலாமே.......!

மோகன் : அது .........யார் வேணும்னாலும் அறுக்கலாம்.... நீ வந்து அறுக் கிறீயா......? இப்படிப்பட்ட இடங்களுக்கெல்லாம் போனால் தான் இப்படியொரு ஆசைவரும். (தூரத்தில் நெற்பயிர்களை அறுவடை செய்து கொண்டிருந்த ஒரு பெரியவரை அழைத்தான்.)

பெரியவர் : என்ன தம்பி...! வேடிக்கை பார்க்க வந்தீங்களா....?

மோகன் : ஆமாங்கய்யா........ இவன் எங்க நண்பன். இவனுக்கு நெல் அறுக் கணும்னு ஆசை. உங்க அரிவாளைக் கொஞ்சம் தர்றீங்களா........?

பெரியவர் : அட........ படிக்கிற புள்ளைங்க......! இந்தாங்க புள்ளைங்களா.....? (அரிவாளை வாங்கி சந்திரன் கையில் கொடுக்கிறான். அவனும் வயலுக்குள் இறங்குகிறான்.)

மூர்த்தி : சந்திரா...... என்னடா இது? ஒரு கைப்பிடி அறுக்குறதுக்கு இத்தனை நேரமா........? உனக்குப் பக்கத்திலே மத்தவங்க எப்படி அறுக்குறாங்க பாரு.

சந்திரன் : யப்பா ........! என்னடா இது....! எப்படிடா இத்தனை கஷ்டமான வேலை பாக்குறாங்க?.

(சற்று நேரத்திலே வியர்த்துப் விறுவிறுத்துப் போய் வருகிறான்)

மோகன் : ஒரு பத்து நிமிஷத்துக்கே நீ இந்த அலுப்பு அலுத்துக்கிறியே..!. இந்த நெல்ல விதைச்சு, நீர் பாய்ச்சி, களையெடுத்து, பாதுகாத்து இன்னைக்கு

அறுவடை செய்றாங்க, நமக்கு அரிசி வருது. உழைப்பவர்கள் அவர்கள்; உண்பவர்கள் நாம். அவங்க எத்தனை கஷ்டப்படுறாங்க பாரு. அவங்க சிந்துற வியர் வைத்துளிகள் தான் நம்ம சாப்பாடு. இதையெல்லாம் சாப்பிடுற போது நாம கொஞ்சமாவது யோசிச்சிருப் போமா...? சொல்லுடா? (சந்திரன் மௌனமாகிறான் அவன் தோளைப் பற்றிக் கொண்டே) உன் மனசு வருத்ததப்படுற மாதிரி நாங்க எதாவது பேசியிருந்தா எங்கள மன்னிச்சிடுடா ....

சந்திரன் : இல்லடா .....! உங்க கூட இந்த மாதிரி இடங்களுக்கு வந்த பின்னாடித்தான் எனக்கும் ஒரு மாறுதல் வருது.

மூர்த்தி : ஆமா, சந்திரா! உன் மனசுல அப்படியொரு மாறுதல் ஏற்படணும்னுதான் நாங்க உன்னைக் கூட்டிட்டு வந்தோம். அந்த விவசாயிகளைப் பார்த்தீயா..... அவங்க உழைப்பு மட்டும் இல்லேன்னா.... இவங்க வயல்ல இறங்காம இருந்துட்டா நாம பட்டினிதான் ....... !

மோகன் : சந்திரா........ படிக்குற நம்மள மாதிரி மாணவங்க கிட்ட இதுபோன்ற தாழ்வான எண்ணங்கள் வரவே கூடாது.

சந்திரன் : குழம்பிய மனசோடவந்தேன். தெளிவான சிந்தனையோடபோகப் போறேன். அதுமட்டுமில்ல நாளையில் இருந்து நானும் உழைக்கப் போறேன்.

("செய்யுந்தொழிலே தெய்வம்–அந்த

திறமைதான் நமது செல்வம்.

கையும் காலுந்தான் உதவி– கொண்ட

கடமை தான் நமது பதவி"

– என்ற பாடல் வானொலி வழியாகக் காற்றில் தவழ்ந்து வந்து சந்திரனின் காதுகளுக்கு இனிமையைத் தந்தது).

*(திரை)*

**– அருப்புக்கோட்டை செல்வம்**

# செயல்பாடுகள்

### கருத்து வெளியிடுதல்

“குழம்பிய மனசோட வந்தேன். தெளிவான சிந்தனையோடு போகப்போறேன். அது மட்டுமல்ல நாளையில இருந்து நானும் உழைக்கப் போறேன். ”– என்று சந்திரன் கூறக் காரணமென்ன?

### நாடகம் நடித்தல் – அழைப்பிதழ் உருவாக்குதல்

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு உங்கள் மாவட்டக் கலையரங்கில் “உழைப்பின் உன்னதம்” என்ற நாடகத்தை நடித்துக் காட்டுங்கள். அதற்கான அழைப்பிதழ் தயார் செய்யுங்கள்.

### இலக்கிய நடையாக மாற்றுதல்

நாடகத்தில் பேச்சு மொழியாக அமைந்த ஒரு பகுதியை எடுத்து இலக்கிய நடையாக மாற்றுக.

### வடிவமாற்றம் செய்தல்

‘உழைப்பின் உன்னதம்’ என்ற இந்த நாடகத்தைக் கதை வடிவமாக மாற்றிப் பொருத்தமான தலைப்புக் கொடுக்கவும்.

### நாடகச் செய்தி

“உழைப்பின் உன்னதம்” என்ற நாடகம் உணர்த்தும் கருத்துகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள். கருத்துகளைத் தொகுத்துக் குறிப்பாக்குங்கள்.

### பாத்திரப் படைப்புத் திறன் அறிதல்

இந்நாடகத்தில் உங்களுக்குப் பிடித்த பாத்திரம் எது? அப்பாத்திரப்படைப்புக் குறித்து உங்கள் கருத்தினைத் திறனாய்வுக் கண்ணோட்டத்தில் வெளிப்படுத்துக.

### ஒப்பிடுதல்

நாடகத்தின் வடிவ அமைப்பிற்கும் நாவலின் வடிவ அமைப்பிற்கும் இடையே காணும் வேறுபாடுகளைத் தருக.

# செய்யும் தொழிலே தெய்வம்

சிக்கராயபுரத்தில் உழவுத்தொழில் செய்து வாழ்ந்து வந்த உலகப்பன் என்பவருக்கு ஒரே மகன். அவன் பெயர் கதிரவன்.

அதே ஊரில் கருங்கல் உடைக்கும் தொழிலைச் செய்து வாழ்ந்து வந்தார் கண்ணாயிரம் என்பவர். அவருடைய மகனின் பெயர் பலராமன்.

உலகப்பனும் கண்ணாயிரமும் பக்கத்துப் பக்கத்து வீட்டுக்காரர்கள். கதிரவனும் பலராமனும் ஒரே பள்ளியில் படிக்கும் நண்பர்கள். பலராமன் மூத்தவன்.



பலராமன், கதிரவன் இருவருமே, தங்கள் பெற்றோர்களைப் போல் கிராமத்தில் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து வாழாமல் பட்டம் பெற்று நல்ல பணியில் சேர்ந்து. நகரத்தில் வசதியோடு வாழ வேண்டும் என்று பெரிதும் விரும்பினார்கள். அந்த ஆசை அவர்களுக்குப் படிப் பில் அதிக ஆர்வத்தையும் அக்கறையை யும் உண்டாக்கியது. உலகப்பனும் கண்ணாயிர மும் தங்கள் பிள்ளைகள் நல்ல உத்தியோகத்தில் வெயில் படாமல் நிழலிலே அமர்ந்து வேலை செய்ய வேண்டும்; தங்களைப் போல் வெயிலிலும் மழையிலும் உழைத்து உடலை வருத்திக் கொண்டு வாழக் கூடாது என்று விரும்பினர்.

பெற்றோர்களின் எதிர்பார்ப்பு ஏமாற்ற மாகி விடவில்லை. அந்தச் சிற்றூரில் கதிர வனும் பலராமனுமே படித்து முதன் முதலாக பட்டம் பெற்றனர். அதனால் எல்லோரும் வெகுவாகப் பாராட்டினார்கள்.

அடுத்து அவர்கள் தங்கள் படிப்புக்கு ஏற்ற நல்ல பணியைத் தேடும் முயற்சியில் இறங்கினார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடி வேலை அவ்வளவு சீக்கிரம் கிடைப்பதாக இல்லை. காலம் ஓடிக்கொண்டே இருந்தது. கதிரவனும் பலராமனும் வேலை தேடுவதே வேலையாக இரண்டு மூன்று ஆண்டுகளைக் கழித்து விட்டார்கள்.

காலம் ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் இருவருக்குமே வெவ்வேறு இடத்தில் இருந்து நேர்முகப் பரிசோதனைக்கு வரச்சொல்லி அஞ்சல் வந்தது. முதன் முதலாக அப்படி ஓர் அழைப்பு. அவர்களுக்கு வேலையே கிடைத்து விட்டதைப் போல் வீட்டில் மகிழ்ச்சி பொங்கியது.

பலராமனுக்கு ஒரு மருந்துக் கம்பெனியிலிருந்து அழைப்பு வந்திருந்தது. கதிரவனுக்கு ஒரு சீட்டுக் கம்பெனியிலிருந்து அழைப்பு வந்தது. பலராமனும் கதிரவனும் பணியைப் பெறுவதற்குப் பணம் தேவைப் படுகிறது என்று வீட்டில் சொல்லாமலே மறைத்துவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். என்றாலும் உலகப்பனும் கண்ணாயிரமும் வற்புறுத்திக் கேட்கவே அந்த உண்மையையும் சொல்லி விட்டார்கள்.

வீட்டிலிருந்த கொஞ்ச நஞ்ச நகைகளை விற்றும் யார்யாரிடமோ கடன் வாங்கியும் அந்தத் தொகையைச் சமாளித்து விட்டார் கண்ணாயிரம். தங்கள் சொந்த நிலத்தை ஒரு தனவந்தரிடம் அடகு வைத்துப் பணத்தைத் தேடிக் கொடுத்தார் உலகப்பன்.

பலராமன் மருந்துக் கம்பெனியில் பணத்தைச் செலுத்தி விட்டுப் பணியில் அமர்ந்தான். பணியில் நேர்மையாகவும் கடமையுணர்வோடும் இருந்தான். அந்த கம்பெனியில் பணியாற்றிக் கொண்டே கூடுதலாக வருமானம் தரக்கூடிய வேறு வேலைக்கும் முயன்று கொண்டிருந்தான். நல்ல சம்பளம் கிடைக்கக்கூடிய ஒரு வேலை வாய்க்கும் வரை, கிடைத்த வேலையில் கண்ணுங்கருத்துமாக உழைப்பது என்பது அவன் திட்டம்.

கதிரவன் தன் தந்தை கொடுத்த பணத்தை எடுத்துக் கொண்டு சீட்டுக் கம்பெனிக்குப் போனான். கம்பெனிக்குள் நுழையும் போதே கூச்சலும் குழப்பமுமாக இருப்பதை அறிந்து கொண்டான்.,

கம்பெனியின் தலைமை நிர்வாகியை நான்கு பேர் சூழ்ந்து கொண்டு உரத்த குரலில் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவரும் ஏதேதோ சமாதானம் சொல்லிப் பார்த்தார். அவர்கள் மேலும் மேலும் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த அறையில் வேலை செய்து கொண்டிருந்த சிப்பந்திகள் அனைவரும் கவலையில் சூழ்ந்திருப்பதைப் போலக் காணப்பட்டார்கள்.

காரணம் தெரிந்து கொள்ள விரும்பினான் கதிரவன். யாரைக் கேட்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோதுதான். “கொஞ்சம் இருங்கய்யா உங்க பணத்தைக் கொஞ்ச நேரத்திலே தந்துடறேன்!” என்று சொல்லிக் கொண்டே கதிரவனை நோக்கி வந்தார். கம்பெனி நிர்வாகி.

சீட்டு எடுத்தவர்களுக்குப் பணம் கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தவருக்குத் தன்னைக் கண்டவுடனே முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடக் காரணம் என்ன?

அந்தக் கணமே அவன் உள் மனம் அவனை எச்சரித்தது, ‘எடுத்தவர்களுக்குப் பணம் கட்டத் தவிக்கும் ஒரு சீட்டுக் கம்பெனியிலே தொகை கட்டி நீ வேலைக்குச் சேரவேண்டுமா? உன் வருங்காலத்துக்கு இங்கே உனக்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது? உன் பணம் பூனை உறிஞ்சிய பாலாகி விட்டால்.... உன் கதி என்னவாகும்?

உன் தந்தையார் உயிராய் மதிக்கும் நிலத்தை அடமானம் வைத்தல்லவா பணம் கொடுத்து அனுப்பியிருக்கிறார்?'.

இவ்வித எண்ணங்களால் கதிரவன் அதிகமாகக் குழம்பிப் போனான். ஆழம் தெரியாமல் ஆற்றில் இறங்கிக் கடக்க நினைப்பது அறிவுடைமையாகாது என்பது விளங்கியது அவனுக்கு.

அவன் அந்தக் கம்பெனியை விட்டு வெளியேறி வீதியில் வந்து நின்று நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான்.

வண்டியைப் பிடித்து வேகமாக வீடு வந்து சேர்ந்தான் கதிரவன். உடனடியாக திரும்பி வந்தவனைக் கண்டு திகைத்துப் போனார் தந்தை. கதிரவன் விஷயத்தை உரைத்ததும் தந்தையும் நிம்மதிப் பெருமூச்சை விட்டார்.

பாம்பின் வாயில் சிக்கிய தவளை தப்பியதைப் போலத்தான் இருக்கு நீ, பணத்தையிழக்காமல் திரும்பி வந்திருப்பது என்று எல்லாரும் அவனை பாராட்டினார்கள்.

"இதற்குத் தான்யா படிக்கணும்கிறது. சமயத்திலே இப்படிப் புத்தி தோணணுமே இது மாதிரி எல்லாருக்கும் தோணுமா?" என்று வியந்தார் ஒரு பெரியவர்.

"அப்பா! நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன் என்றான் கதிரவன். என்னப்பா? என்று அன்பாகக் கேட்டார் உலகப்பன். வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவானேன்? நமக்குத்தான் போதிய அளவுக்குத் தொகையை வைத்து ஒரு டிராக்டரை வாங்கி, நவீன முறையிலே விவசாயம் பண்ணலாமுன்னு நினைக்கிறேன். அரசாங்கமும் படித்தவர்கள் தொழில் செய்யப் பண உதவி செய்யுது. விவசாயத்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் நவீன வழி முறைகளைச் சொல்லிக் கொடுத்து, நல்ல விதை, சிறந்த உரம் போன்றவற்றையும் கொடுத்து உதவி பண்ணுவாங்க. நான் நம் ஊரிலேயே சிறந்த முறையிலே விவசாயம் செய்யலாமுன்னு நினைக்கிறேன்" என்றான் உறுதியாக.

"இவ்வளவு படிச்சிகிட்டுக் கடைசியிலே நீயும் ஏர்த்தொழிலையா செய்ய வேண்டும்?" என்றார் அங்கிருந்த ஒருவர்.

"ஏர்த்தொழில் தாங்க ஏற்றமுள்ள தொழில். இந்தத் தொழிலிலே நாம் யாருக்கும்கைகட்டிச் சேவகம் செய்ய வேண்டாம், ஊரைக் காப்பாற்றுகிற தொழில்; உலகத்தையே காப்பாற்றுகிற தொழில்; இதிலே லஞ்சம் வஞ்சம் இதுகளுக்கெல்லாம் இடமேயில்லை. படித்தவர்கள் நவீன விஞ்ஞான முறையிலே இந்தத் தொழிலைச் செய்ய முன்வந்து விட்டால், நிலத்திலே விளைச்சல் பெருகும். நாட்டிலே செழுமை பெருகும். அரசாங்க வேலை கிடைத்தாலும் சரி, கிடைக்கா விட்டாலும் சரி.... இனி நான் நம் நிலத்தைத்தான் நம்பப் போகிறேன். மண்ணை நம்பிச் செய்கிற புண்ணியத் தொழிலில் சூது, ஏமாற்றம் ஏதும் இருக்காது". தெளிவாகச் சொல்லிவிட்டு நெஞ்சை நிமிர்த்திக்

கொண்டு உள்ளே போனான் கதிரவன். அன்றே அவன் வயல்வெளிக்குப் புறப்பட்டு விட்டான். அடுத்த நாளிலிருந்தே தன் பணியைத் தொடங்கிவிட்டான்.

மருந்துக் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்த பலராமன் மூன்று மாதம் கழித்து, ஊருக்குத் திரும்பி வந்தான். அப்போது அவன் ஆளே அடையாளம் தெரியாதபடி, கறுத்துச் சிறுத்திருந்தான். உடல் நலக் குறைவோடு 'லொக்லொக்' என்று இருமியபடி தான் ஊருக்குள் வந்தான்.

தன் நண்பன் கதிரவனைச் சந்திக்க வந்த போதும் அவன் இருமிக் கொண்டு தான் இருந்தான்.

"என்னப்பா உன் மருந்துக் கம்பெனியில், உன் உடம்புக்கு மருந்து ஏதும் இல்லையா? ஒரே அலைச்சலா? ஆள் பாதியாகி விட்டாயே!" என்று சிரிப்பையும் கவலையையும் சேர்த்துக் கேட்டான் கதிரவன்.

"ஊர் ஊராகத் திரிகிற வேலை, வீதி வீதியாகப் போய், மருந்துக் கடைகளைத் தேடித் தேடிக் கண்டு பிடிக்கணும். சாமர்த்தியமாப் பேசணும், சரக்கைத் தள்ளணும். இத்தனைக்கும் சம்பளம்... என் சாப்பாட்டுக்கே போதல்லே. சாப்பாடும் கண்ட கண்ட இடத்திலே. அந்த வேலைக்குத் தலை முழுகியாச்சு. நீ மண்ணை நம்பி மனம் மாறி வந்திருக்கேன்னு சொன்னாங்க நான் ஊருக்கு வந்தப்புறம். உன்னை நம்பி உன் கூட உழவுத் தொழிலிலே ஈடுபடப் போகிறேன். எனக்கும் உன்னோடு உங்கள் நிலத்தை உழுது பயிர் செய்ய உன் சம்மதம் தேவை" என்று கெஞ்சும் குரலில் பேசினான் பலராமன்.

"நிரம்பவும் மகிழ்ச்சியாயிருக்கு. எனது ஒரு பகுதி நிலத்தை உன் பொறுப்பிலே விடறேன். பயிர் செய். நீயே பார்த்து, விளையறதிலே கொஞ்சம் கொடுத்தாலே போதும்" என்றான் கதிரவன் மகிழ்ச்சியோடு.

"மேழிச் செல்வம் கோழைபடாது. உழவுத் தொழிலால் வரும் செல்வத்துக்குக் குறைவும் இருக்காது; குறையும் இருக்காது. குற்றமில்லாத தொழில். சுற்றத்தார் நம்மை வெறுத்து ஒதுக்கினாலும், நிலம் நம்மை வெறுத்து ஒதுக்காது. உழைக்கிற அளவுக்குப் பலன் கிடைக்கும். அதுவரைக்கும் இருக்கிற நிலத்தை உழுதுபயிர் செய்வோம். அது நம் உயிரை மட்டுமல்ல... ஊரார் உயிரையும் காப்பாத்த உதவும்" என்று கூறினான் பலராமன். அவனை அணைத்துக் கட்டிக் கொண்டான் கதிரவன்.

"எவ்வளவு படித்தால் என்ன? உழைத்து வாழ வேண்டும். உட்கார்ந்து அலுவலகத்தில் பணி செய்வது மூளைஉழைப்பு. வெளியே தொழில் செய்வதற்கு உடல் உழைப்பு மட்டுமா மூளை உழைப்பும் வேண்டும்" என்றான் கதிரவன்.

"ஆமாம்...... எந்தத் தொழிலையும் அறிவியல் பூர்வமாகச் செய்வதற்கு அந்த அறிவும் அவசியம் இல்லையா? படித்தவர்களே வியர்வை சிந்தப் பாடுபடுவதை இழிவாக நினைக்கலாமா?" என்று சிரித்தான் பலராமன்.

**- பூவை அமுதன்**

# செயல்பாடுகள்

### கருத்து வெளியிடுதல்

நல்ல உத்தியோகத்தில் வெயில்படாமல் நிழலிலே அமர்ந்து வேலை செய்வதை உயர்வாகவும் உடல் வருந்தி உழைப்பதை இழிவாகவும் பலரும் எண்ணுவது ஏன்? இதன் விளைவுகள் என்னென்ன? என்பதைப் பற்றி விவாதித்து உங்கள் கருத்துகளை எழுதுங்கள்.

“செய்யும் தொழிலே தெய்வம்” என்ற கதையில் இடம் பெற்றுள்ள கதாபாத்திரங்களில் உங்கள் மனதைக் கவர்ந்தது யார்? ஏன்?

### ஒப்பிடுதல்

“உழைப்பின் திறன்” குறித்து வரும் இலக்கியப் பாடல்களையும் திரைப் படப்பாடல்களையும் திரட்டி, எவையேனும் இரண்டு பாடல்களை ஒப்பிட்டுக் கூறுக.

### திரட்டுதல்

பாடப்பகுதியில் வரும் உவமைத் தொடர்களையும் பழமொழிகளையும் திரட்டுங்கள்.

### நிறுத்தற்குறியிடுதல்

என்னப்பா உன் மருந்துக் கம்பெனியில் உன் உடம்புக்கு மருந்து ஏதும் இல்லையா ஒரே அலைச்சலா ஆள் பாதியாகி விட்டாயே என்று சிரிப்பையும் கவலையையும் சேர்த்துக் கேட்டான் கதிரவன்.

ஏற்ற நிறுத்தல் குறியீடுகளை இடுக.

### வாக்கியமாற்றம் செய்தல்

“அப்பா நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்”. என்றான் கதிரவன், இவ்வாக்கியத்தை வேறொருவர் கூறுவதாக வாக்கியத்தை மாற்றி அமைக்கவும்.

### கட்டுரை எழுதுதல்

இவ்வளவு படிச்சிகிட்டு கடைசியிலே நீயும் ஏர்த்தொழிலையா செய்ய வேண்டும்? என்று கதிரவனிடம் கேட்டார் ஒருவர். இக்கூற்று தனிமனிதனின் கருத்தைப் பிரதிபலிக்கின்றதா? அல்லது பொதுவாக சமூகத்திலிருக்கும் எண்ணத்தைப் பிரதிபலிக்கின்றதா? சமூக முன்னேற்றத்திற்கு நீங்கள் கூறும் வழிமுறைகளைப் பற்றி விவாதியுங்கள். கருத்துகளைத் தொகுத்துக் கட்டுரையாக எழுதுங்கள்.

# உலகம் உள்ளங்கையில்

அந்தப் பையன் சிறியவனாக இருந்தான். சூட்டிகையாக இருந்தான். அவனுடைய வகுப்பில் அவன்தான் கெட்டிக்கார மாணவன். அறிவியல் பாடத்தில் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை, மூத்த மாணவர்கள் கூட அவனிடத்தில் தான் கேட்பார்கள். நடு வழியில் அவனை நிறுத்தி, பௌதீகமாகட்டும்; கணிதமாகட்டும், எதைக்கேட்டாலும் அவன் கண்களில் ஓர் அதீதமான ஒளி வீசும். அறிவியலை அவன் புரிந்து கொள்ளும் வேகமே அலாதி.

அவன் குடும்பம் ஏழைக் குடும்பம். ஆனால் படித்தவர்கள் உள்ள குடும்பம். அவனுடைய தகப்பனார் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர். ஆங்கில நூல்கள் படிப்பதில் அசாத்திய ஆர்வம் உள்ளவர்.

அவனுடைய வகுப்பில் எல்லோரும் ஏதாவது இஞ்சினீயரிங் கல்லூரியில் சேரத் துடித்துக் கொண்டிருந்தார்கள். மிகவும் கெட்டிக்காரர்களான மாணவர்கள் பிரசித்தி பெற்ற ஐ.ஐ.டி – யில் சேர்ந்து படிக்க விரும்பினார்கள். இதற்கு நுழைவுத் தேர்வு உண்டு. அவனும் அவன் நண்பர்களும் அதற்காக விண்ணப்பித்தார்கள். ஆனால் அவர்களிடம் அதற்கான புத்தகங்கள் இருக்கவில்லை. தனிப்பயிற்சி வகுப்புகளுக்கும் செல்லவில்லை.

மைசூரில் உள்ள சாமுண்டி மலையில், கல் மண்டபத்தின் நிழலில் இவர்கள் உட்கார்ந்து கொள்ளுவார்கள். அந்தச் சின்ன மாணவன்தான் மற்றவர்களுக்கு எல்லாம் வழிகாட்டி. மற்றவர்கள் ஒரு பிரச்சினையை எடுத்துக் கொண்டு விடை காணத் தெரியாமல் விழிக்கும் போது, இவன் எளிதில் முடித்துவிட்டு, ஒரு வெட்கச் சிரிப்போடு எல்லோரையும் பார்ப்பான். தனியாகக்கூட ஒரு மரத்தடியில் அமர்ந்து ஐ.ஐ.டி கனவு காண்பான்.

அந்த ஆசைப்பட்ட நாளும் வந்தது. பெங்களூருக்கு வந்து ஓர் உறவினர் வீட்டில் தங்கிக் கொண்டு, நுழைவுத் தேர்வுக்கு ஆஜரானார்கள். ஐ.ஐ.டி., முடிவுகள் வெளியாயின. அவன் 17–வது இடத்தில் தேறியிருந்தான். ஒரு மாணவனுக்கு மகிழ்ச்சியளிக்க இதைவிட வேறென்ன வேண்டும்! அவன் பூரித்துப் போனான். செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்த தகப்பனாரிடம் போய், “அப்பா, எனக்கு 17வது இடம் கிடைத்திருக்கிறது!” என்றான்.

“சபாஷ், பையா!” என்றார் அப்பா.

“எனக்கு ஐ.ஐ.டி–யில் சேர வேண்டுமே?” என்றான்.

அப்பா செய்தித்தாளை மடித்து வைத்தார். தலையை உயர்த்தி, பையனைப் பார்த்துக் கரகரத்த குரலில் சொன்னார்:

“நீ புத்திசாலிப் பையன் தான். உனக்கு நம் நிதி நிலைமை தெரியும். எனக்கு ஐந்து பெண்களைத் திருமணம் செய்து கொடுத்தாக வேண்டும். மூன்று பையன்களைப் படிக்க வைத்தாக வேண்டும். நானோ மாதச் சம்பளம் வாங்குகிறவன். உன்னுடைய ஐ.ஐ.டி செலவுகளை என்னால் சமாளிக்கவே முடியாது. நீ வேண்டுமானால் மைசூரிலேயே தங்கியிருந்து மேற்கொண்டு எத்தனை வேண்டுமானாலும் படி!”

எந்த தகப்பனுக்கும், ஒரு புத்திசாலிப் பையனிடம் ‘என்னால் செலவழிக்க முடியாது’ என்று சொல்வது கடினம் தான். ஆனால் சூழ்நிலை அப்படி. அப்போதெல்லாம் குடும்பத்தின் தலைவர் ஒருவரே சம்பாதித்துக் கொண்டிருந்த சூழல்.

மகனிடம் கசப்பான உண்மையைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறதே என்று அவருக்கும் மனசுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் வேறு வழி இல்லை. பையன் புரிந்து கொள்ள வேண்டும், அவ்வளவுதான்,

பையனுக்கு ஏமாற்றமாகத்தான் இருந்தது. அவனுடைய வருத்தத்தை யாரிடத்தும் அவன் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. மனசு நொந்து போயிருந்தாலும் யாரிடமும் கோபம் கொள்ள வில்லை.

அவனுடைய நண்பர்கள் சென்னைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள், ஐ,ஐ,டி–யில் சேர. பள்ளியிலும், கல்லூரியிலும் நெருங்கிய நண்பர்களாக இருந்ததால், ஸ்டேஷனுக்குப் போய் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்க விரும்பினான்.

ஸ்டேஷனில் அவன் தோழர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியில் ஆரவாரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். பல பறவைகள் ஒன்றாக எழுப்பும் ஒலி போல இருந்தது. தங்கள் புதிய விடுதிகளைப் பற்றி, புதிய வகுப்புகள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவனுக்கு அதில் இடமில்லை. எனவே அவன் அமைதியாக நின்று கொண்டிருந்தான். ஒருவன் மட்டும் அவனைப் பார்த்துவிட்டு, நீயும் வந்திருக்க வேண்டும் என்றான். அவன் பதில் ஏதும் சொல்லவில்லை. எல்லோருக்கும் வாழ்த்து மட்டும் சொன்னான். ரயில் மெதுவாகப் புறப்பட்டதும், அவனுக்கு எல்லோரும் கையை அசைத்தார்கள்.

ரயில் புறப்பட்டுப் போன பிறகும் அவன் அங்கேயே நின்று கொண்டிருந்தான். அது 1962–ஆம் வருடம், ஜூன் மாதம். மழைக் காலம் தொடங்கிவிட்டதால், இருள் சூழத் தொடங்கி விட்டது. இலேசாக மழைத் தூறல் போட்டது. அப்படியும் கூட அவன் ஆடாது அசையாது நின்று கொண்டிருந்தான்.

கோபமோ, பொறாமையோ துளியும் இல்லாமல், அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். ‘ஐ.ஐ.டி.யில் எல்லா மாணவர்களுமே நன்றாகப் படித்து. வாழ்க்கையில் சாதனை புரிகிறார்கள். ஆனால் அந்த நிறுவனத்தை விட, நீதான், நீ மட்டும்தான், உன் கடின உழைப்பால் வாழ்க்கைப் பாதையை மாற்றி அமைத்துக் கொள்ள முடியும்!’

ஒரு வேளை அவனுக்கு பகவத் கீதையில் சொல்லப்பட்ட ‘உனக்கு நல்ல நண்பனும் நீதான்; உனக்குப் பரம எதிரியும் நீதான்!’ என்ற தத்துவம் தெரிந்திருக் கவில்லை போலும்.

பின்னாளில் அவன் கடுமையாக உழைத்தான். ஒரே குறிக்கோளுடன், தன்னுடைய சொந்த நலனிலோ, மகிழ்ச்சியிலோ துளியும் அக்கறை இன்றி உழைத்தான். தன் செல்வத்தைப் பிறருடன் பங்கிட்டுக் கொண்டான். எந்தச் சாதி, சமூகம், அரசியல் தொடர்பும் இன்றி வாழ்க்கையில் உயர்ந்தான்.

ஒரு பள்ளிக்கூட ஆசிரியரின் மகன், நியாயமான வழியிலேயே நிறையச் சம்பாதிக்க முடியும் என்று பிற இந்தியருக்குக் காண்பித்தான். அவன் உருவாக்கிய ‘டீம்’, அவனைப் போன்ற திறமைசாலிகள் கொண்டதுதான்.

அந்தப் புத்திசாலி மாணவன்தான் இன்று இந்தியாவின் மென்பொருள் தொழில்நுட்பத்தை ஒரு வெற்றிகரமான வாணிபமாக்கியவர்; இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி அலையைத் தோற்றுவித்தவர்; தரத்தில் சமரசம் செய்து கொள்ளாதவர்;, அவருடைய நேர்மைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு. தாராளமான மனசுள்ள கொடையாளி, புத்தி சாதுரியத்தைக் கையாண்டு, உயர்ந்த மதிப்பீடுகளையும் மேற்கொள்ள முடியும் என்ற கொள்கை உள்ளவர்.

அவர் வேறு யாருமல்ல.

இன்ஃபோஸிஸ் தலைவர் நாகவர ராமராவ் நாராயண மூர்த்தி.

எனக்கும் மூர்த்திக்கும் திருமணம் ஆனபோது என் தாயார் விமலா குல்கர்னி எனக்குப் புத்திமதி சொன்னாள்.

“நாம் வாழ்வில் என்று பணத் தட்டுப்பாடு வந்து சிரமப்படுவோம் என்று தெரியாது. அதனால் உன் சம்பளத்திலிருந்தோ, உன் கணவரின் சம்பளத்திலிருந்தோ சேமிப்பு என்று கொஞ்சமாவது வைத்திருக்க வேண்டும். உன் சம்பளம் ஆயிரம் ரூபாய்என்றால், அதில் 50 அல்லது 100 ரூபாய் எடுத்து ஒதுக்கி வைத்துவிடு. இந்தப் பணத்தை எடுத்து ஆபரணமோ, துணிமணிகளோ வாங்கக் கூடாது. இளமையில், நிறையப் பொருட்களை வாங்கச் செலவழிப்பீர்கள். ஆனால் கஷ்டமான நிலைமையின் போது, உதவுவதற்கு யாருமே வரமாட்டார்கள்”.

இதைக் கேட்டு நான் சிரித்தேன். பணத் தட்டுப்பாடு வரக்கூடிய அளவுக்கு சிரமமான நாட்கள் வராது என்று திடமாக நம்பினேன். இளமையில் எல்லா நாட்களும் மகிழ்ச்சிகரமான நாட்களாகத் தோன்றுகின்றன. ஆனால் என்ன தோன்றிற்றோ என்னவோ. அம்மாவின் பேச்சைக் கேட்டு, சேமிக்கத் தொடங்கினேன். சமையலறையில் உள்ள பத்திரமான அலமாரியில் பணத்தைப் போட்டு வைத்தேன். திருமணமான பிறகு, மும்பையில் வாழ்க்கை சீராக ஓடிற்று, எங்களுக்கு ஒரு மகள் பிறந்தாள். எல்லா மத்தியதரக் குடும்பங்களையும் போல நாங்களும் மகிழ்ந்து போனோம்.

பாந்த்ரா பகுதியில் ஓர் அடுக்கு மாடியில் வசித்தோம். நான் ஃபோர்ட் பகுதியிலுள்ள 'டெல்கோ' விலும், மூர்த்தி நரிமன் பாயின்ட்டில் உள்ள பிஸிஎஸ் நிறுவனத்திலும் பணியாற்றினோம்.

ஒரு நாள் அலுவலகத்திலிருந்து சோர்ந்து போய்த் திரும்பினார் மூர்த்தி. அதிகம் பேசக்கூடியவரல்ல என்றாலும் அன்றைக்கு அவர் வித்தியாசமாகவே தெரிந்தார். நான் சமையல் அறையில் சப்பாத்தி செய்து கொண்டிருந்தேன்.

"ஏன் கவலையாக இருக்கிறீர்கள்? " என்று விசாரித்தேன்.

"மென்பொருள் எனப்படும் சாஃப்ட்வேர் துறை, இனி வரும் வருடங்களில் பெரிய துறையாக விளங்கப் போகிறது. நம் நாட்டில் இந்தத் துறையில் வல்லுனர்களுக்குப் பஞ்சமே இல்லை. கடின உழைப்பும், தெள்ளிய சிந்தையும் இருந்தால் போதும். அதற்கு இந்தியாவில் நிறையப் பேர் கிடைப்பார்கள். அவர்களின் திறமையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என நினைக்கிறேன். ஒரு சாஃப்ட்வேர் நிறுவனம் தொடங்க விரும்புகிறேன்! "

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நாங்களே ஒரு நிறுவனத்தைத் தொடங்குவோம் என்று நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. எங்கள் இருவர் குடும்பத்திலுமே தொழில் தொடங்கியவர்கள் யாருமே இல்லை.

மூர்த்தி பிஸிஎஸ்-ஸிலும், நான் டெல்கோவிலும் தொடர்ந்து வேலை பார்ப்போம். திருப்தியுடன் அமைதியான வாழ்க்கை நடத்துவோம் என்றுதான் நினைத்திருதேன். உடனே நான் மறுப்புத் தெரிவித்தேன்.

மூர்த்தி அவருடைய திட்டங்களையும் எதிர்பார்ப்புகளையும் விளக்கத் தொடங்கினார்.

"உனக்குத்தான் சரித்திரம் என்றால் பிடிக்குமே..... நம் இந்தியர்கள் தொழிற் புரட்சியைக் காணவில்லை. அப்போது நம்மை அந்நியர் ஆண்டு வந்தனர். இப்போது அறிவுப் புரட்சி நடைபெறுகிறது. இதை நம் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்த வேண்டும். இதைத் தவற விட்டோம் என்றால். இன்னொரு வாய்ப்பு வாழ்க்கையில் கிடைக்காது. பணத்துக்காக மட்டுமே நான் இந்த முடிவை எடுக்கவில்லை. இதைக் கொஞ்ச நாளாகவே நினைத்துக் கொண்டுதான் இருக்கிறேன். இப்போது இதை நான் செய்துதான் ஆக வேண்டும். வேறு சரியான சமயம் வரவே வராது".

நான் குழந்தைப் பருவ நாட்களை நினைத்துப் பார்த்தேன். எங்கள் உறவினர் ஒருவர் பிஸினஸ் ஆரம்பித்தார். கடைசியில் ஏக நஷ்டம் ஆயிற்று. அப்புறம் குடும்பச் சொத்துக்களை எல்லாம் விற்க வேண்டி வந்தது. எனவே என்னைப் பொறுத்த வரை, நம்முடைய வியாபாரம் என்னும் போது நஷ்டம்தான் நினைவுக்கு வந்தது.

‘நமக்கும் அப்படி ஆகிவிடுமோ’ என்று அஞ்சினேன். எங்களுக்கோ ஏதும் சொத்து கூட இல்லை, நஷ்டத்தை ஈடுகட்ட, போதாதற்கு ஒரு பெண் வேறு இருக்கிறாள் எங்களுக்கு. ஒரே குழப்பமாகிவிட்டது எனக்கு.

மூர்த்தி என் மன ஓட்டங்களைப் படித்திருப்பார். “இது புதிய தொழில் துறை. மூளை தான் இதற்குப் பெரிய மூலதனம். பெரிய தொகை எதுவும் மூலதனமாகத் தேவையில்லை. உன்னுடைய முழுச் சம்மதம் தான் இப்போது எனக்குத் தேவை”. என்றார்.

அவர் குரலில் நியாயமும், நேர்மையும் தொனித்தன. நான் என்றுமே அவர் நேர்மையை மதித்து வந்திருக்கிறேன்.

பிரச்சினையைப் பற்றி நான் யோசிக்க ஆரம்பித்தேன். மூர்த்திக்குப் பெரிய குடும்பம் இருந்தது. அது அவரைத்தான் சார்ந்திருந்தது. திருமணம் ஆகாத சகோதரிகள் அவருக்கு இருந்தனர். இந்தச் சூழ்நிலையில் அவர் நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தார். எங்கள் நிதி நிலைமை நிச்சயம் பாதிக்கப்படும் என்று நான் பயந்தாலும் அவர் திறமை மீது எனக்கு நம்பிக்கை இருந்தது. நான் அவரை முழு மனதோடு ஆதரிக்கவில்லை என்றால், புதிய முயற்சியை மேற்கொள்ளுவதில் அவர் திணறித்தான் போவார். வியாபாரம் என்றால் லாபம் – நஷ்டம் இரண்டும் தான் இருக்கும். அப்படி நஷ்டம் ஏற்பட்டால், இத்தனை வருட சேமிப்பும் வீணாகி விடும். ஆனால் அடி மனத்தில், நாம் எப்படியாவது சமாளித்து விடுவோம் என்ற எண்ணம் தோன்றிக் கொண்டே இருந்தது.

“நீங்கள் தனி ஒருவராக இதை ஆரம்பிக்கப் போகிறீர்களா?” என்று கேட்டேன்.

மூர்த்தி சாதாரணமாகச் சிரிக்க மாட்டார். இப்போது அவர் மெல்லிய புன்னகை செய்தார்.

“நான் தனி அல்ல. என்னுடன் என் நண்பர்கள் ஆறு பேரும் சேருகிறார்கள். இது நியாயமாகவும் நேர்மையாகவும் பணம் சம்பாதிக்க ஏற்ற வழி. இந்தியா இந்தத் துறையில் முதன்மை பெற்று, புகழும், செல்வமும் பெற வேண்டும் என்ற கனவு எனக்கு உண்டு. நீ இப்போது எனக்கு உதவ வேண்டும். உன்னால் கொஞ்சம் பணம் கொடுக்க முடியுமா? நீ உதவவில்லை என்றால் என் கனவு மெய்ப்படாது!”

நான் இப்போது அவருக்குப் பணம் கொடுத்து உதவவில்லை என்றால் அவரால் புதிய நிறுவனம் ஒன்றைத் தொடங்க முடியாது. அப்போது என் அம்மாவின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன:

சேமித்த பணத்தை, அத்தியாவசியமான சமயத்தில் எடுத்துச் செலவழி என்பதுதான் அது. அது போன்ற சந்தர்ப்பம்தான் இது... சிந்தித்தபடியே இருந்து, ஒரு முடிவை எடுத்தேன். சமையலறைக்குப் போய் என் சேமிப்புப் பெட்டியைத் திறந்து பார்த்தேன். மாதா மாதம் நான் சேமித்த பணத்தைக் கையில் எடுத்தேன். பத்தாயிரம் ரூபாய்

மொத்தமாக இருந்தது. அதை எடுத்துக் கொண்டு கடவுள் முன் ஒரு சிறிய பிரார்த்தனை செய்து, மூர்த்தியிடம் கொடுத்தேன்.

வெற்றி பெற வாழ்த்துகிறேன், மூர்த்தி, இதுதான் என்னிடம் இருக்கிறது. புதிய நிறுவனத்தின் பொறுப்பை முழு மகிழ்ச்சியுடன் ஏற்போம். சரி: நிறுவனத்துக்கு என்ன பெயர் யோசித்திருக்கிறீர்கள்?

“இன்ஃபோஸிஸ். உன்னுடைய ஆதரவுக்கு நன்றி. இதுதான் மூலதனம். வருகிற வருடங்களில் கரடு முரடான பாதையில் செல்லவும் தயாராக இரு!”

**– சுதா மூர்த்தி**

## செயல்பாடுகள்

**கட்டுரையாக்குதல்**

திரு. நாராயண மூர்த்தி வாழ்க்கையில் சாதனை புரியக்காரணங்களாக நீங்கள் கருதுபவை எவை? கலந்துரையாடிக் கருத்துகளைத் தொகுத்துக் கட்டுரையாக்குங்கள்.

**வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு எழுதுதல்**

மென்பொருள் தொழில் நுட்பத்தில் உலகப் புகழ் பெற்றவரான திரு நாராயணமூர்த்தி அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையைப் படித்தீர்கள் அல்லவா? இதுபோல் சுயமுன்னேற்றத்தால் உயர்ந்த இந்தியர் ஒருவரைப்பற்றி வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு எழுதுக.

**அழைப்புக் கடிதம் எழுதுதல்**

உங்கள் பள்ளி ஆண்டு விழாவிற்கு, திரு. நாராயணமூர்த்தி அவர்களைக் கலந்து கொள்ள வேண்டுகோள் விடுத்து ஓர் அழைப்புக் கடிதம் எழுதுங்கள்.

**இணைய முகவரி – பட்டியலிடுதல்**

தமிழ் தொடர்பான செய்திகளை அறிய உதவும் இணைய முகவரிகளை பட்டியலிடுங்கள்.

**உரையாடல் எழுதுதல்**

இன்ஃபோஸிஸ் என்னும் நிறுவனம் தொடங்குவது குறித்து திரு. நாராயணமூர்த்திக்கும் அவரது மனைவி சுதாமூர்த்திக்கும் இடையே நடந்த உரையை உரையாடலாக மாற்றி எழுதுங்கள்.

**குறிப்பு வரைதல்**

மென்பொருள் நிறுவனத்தைத் தொடங்குவதற்கு முன்னர் திரு. நாராயண மூர்த்தியின் இந்தியாவைக் குறித்துள்ள எண்ணமும் எதிர்பார்ப்பும் எத்தகையதாக இருந்தது? குறிப்பு வரைக.